பல்லாடிமெத்தப்பயந்தவன்போல் நல்லாய்நீ. (கஙகூ00)

சொன்னமொழிசொன்னீரிருசெவியினாராசந்
துன்னியபோற்றேகந்துடிக்குதே நன்னயமுப். (கசo௧)

பட்டணத்திலேமூவர்பண்புடையரென்றுமற்றோர்
கெட்டெனத்தைக்கொண்டகெறுவரென்றுந் தொட்டனைத்த. ()

நாயகன்சொற்கேட்டுநடுங்காதெனைப்பார்த்து
வாய்கொள்ளாவார்த்தைவழங்கினீர் தீயதொழிற். (கசoஉ)

சின்னமொறுக்காத்திருட்டுப்பயல்களைப்போ
லென்னையொருக்காலுமனத்தெண்ணுதீர் கன்னக்கோல். (கசoச)

சாத்துமிடமென்றுஞ்சாத்தாவிடமென்றுஞ்
சித்துவமிதார்க்குந்தெரியாதோ ஆத்தாடி. (கசoரு)

மற்றவரைப்போனினைத்துமாதாபிதாவிடத்துங்
கற்றவித்தைகாட்டுங்கருத்துண்டோ சுற்றிமெல்ல. (கசoசு)

யேய்க்கின்றசூத்திக்கிடுமருந்தையன்றுபெற்ற
தாய்க்கிடுவருண்டோசரசமாய்ப் போக்கிரிக. (கசoஎ)

ஈனத்துவத்தாலிழுக்கேயென்போலனைய
ஞானவர்க்கெல்லாம்வசையாச்சே ஞானத்திற். (கசoஅ)

றேற்றமிலாலுன்கணவன்சீசியெவரிடத்துங்
கிற்றிலுங்கிடைக்கைகிடையாதே மாற்றலரும். (கசoகூ)

போற்றுபுகழ்நல்லதுக்கோர்பொல்லாதுபோலுமுமக்
கேற்றமணவாளனிவனுமோ சீற்றக். (கசகo)

கடுஞ்செட்டுக்காரனிதைக்கண்டிடிலப்பாடா
குடும்பத்தினேருங்குழப்பம் நெடுங்காலம். (கசகக)

பேச்சுவிளைந்துபிணக்காயிருவருக்கும்
மாச்சரியச்சண்டைவளருமே மூச்சுவிட்டால். (கசகஉ)

வம்புவருமேவெளிக்குவாராவிதுமிதனை
யெம்பிறர்க்குங்காட்டாதியற்றியே மெம்பவுநாள். (கசகங)

மிச்சமிலையஞ்சாறுவேளையிற்காதுங்காதும்
வைச்சதுபோற்றுரேன்மகனுனை யச்சமற்றுச். (கசகச)

சும்மாகொடுப்பீருஞ்சொற்படியேநற்பணியா
யெம்மாலோரட்டியிலாதீந்திடுவே னுர்மவர்க. (கசகரு)

எற்புகநீராடையிலோடாணிகழன்றுடல
கற்பணிபோச்சென்னக்கவலையுற்றுர் சிற்பவிதிச். (கசகசு)

சூத்திரத்தாலன்றிச்சுழலாத்திறுகணியாய்
வார்த்துவலுவாயிறுக்கிமாட்டுவேள் நேர்த்தியுள்ள. (கசகஎ)

மாதிரியைக்கண்டுமடவார்பொருமையுற்றுக்
காதலனைப்போட்டுக்கசக்குவார்கள் சோதனையில். (கசகஅ)

பின்றிகழ்மாற்றுன்பதுக்குமேலிருக்குஞ்சேதாரங்
குன்றியிடையேனுங்குறைவுபட தென்றைக்கும். (கசகசு)

கட்டுக்குலையாதுகண்காரச்செட்டிகள்பால்
லட்டமறக்காட்டிமதிப்பிடுவீர் மட்டுமலர். (கஎoo)

மாதாவனையமயிலையுமதழகுக்
கோபணிதியிதையுருக்கிப் போதுமிடை. (கஎoக)

யிக்கணமேதாரேனிதுபோகக்கையிருப்பு
ரொக்கமுள்ளதெல்லாமுகவுவீர் லக்கினநல. (கஎஉஉ)

வேளையிதுதங்கம்விரைவாகவாங்கிவந்து
காளைமுதல்வேலைநடத்துவேன் கேளம்மா. (கஎஉங)

வீட்டுக்குமெத்தவிருந்தினர்வந்தார்களிதற்
கீட்டியவெற்கூலியினிலேதேனு நீட்டுமென்று (கஎஉச)

சாலமிட்டுச்சொல்லவிவள்தன்னினைச்சமூப்பாலே
மாலையிட்டோர்கஞ்சாதமாநீலி யோலமிட்டுக். (கஎஉரு)

கொல்புலியாத்தோல்போர்த்தகொள்கையான்றன்னைமெத்த
நல்லனிவனென்றேநனிமதித்துச் சொல்லரிய. (கசஉசு)

பொற்குவையலோடுபலபூஷணமுநல்கிவிட்டாள்
மற்சடத்தையொத்தமதியில்லாள் சிக்கி. (கசஉஎ)

யுருவியகோலானுளுபர்சகடயோகஞ்
சருவியகாமெனவுந்தட்டான் விரைவுடன்றன். (கசஉஅ)

வீட்டிற்புகுந்துரியமெல்லியற்குக்காட்டியவள்
வாட்டமுற்றகண்ணீரைமாற்றினுள் நீட்டியநரம். (கசஉகூ)

நண்டுலமுங்காய்கறிகள்சாமான்பலார்த்தமெல்லாங்
கொண்டுவந்துமாளிகையிற்கோட்டினுள் கண்டையிட்ட (கசஙக0)

சோமன்வயிரக்கடுக்கன்சோதிதிகழ்மோதிரத்தில்
மாமணியுந்தீட்டிவனேந்திட்டா னுமையாட். (கசஙக)

கந்தவளைவிட்டானலங்காரப்பட்டெடுத்தான்
மெத்தகுகைபூட்டிமினுக்கிவிட்டான் நததுநம். கசஙஉ)

குழந்தைகளுக்கேற்றகுறும்பணிகள்பூட்டி
வழங்கவுளமீதுமகிழ்ந்தான் கிழம்பதெய். (கசஙகங)

சாடையிலேபார்த்துமகன்றன்பானெருங்கியிந்த
வாடையிலேநான்கிடந்துவாடையிலே லேடியவ. (கசஙச)

எஞ்சனமைக்காரியதிபச்புக்காரிமகா
பஞ்சரிப்புக்காரியில்க்காரிக் கஞ்சியந்த. (கசஙரு)

நாச்சியாளுக்குமட்டுநல்கினையேநானிருக்கும்
காட்சியைநீகண்ணாரக்காண்கிலையோ வாய்ச்சநெடுங். (கசஙசு)

காலமகவில்லாமற்கன்றியுனதத்தனொடு
சாலவும்யாசேகித்தலங்கள்சுற்றி பேலெனவுங். (கசஙஎ)

கண்டகண்டகோவிலுக்குங்காணிக்கைதான்செலுத்தி
யண்டரியதீர்த்தங்களாடிவந்துந் தொண்டர்களா. (கசஙஅ)

மாண்டிபரதேசிகளுக்கன்னம்படைத்துமிக
நீண்டவரசுக்குநிதநீர்வார்த்துந் தேண்டரிய. (கசஙஙூ)

தீக்கையுபதேசமுற்றுஞ்சேனைவிரதம்புரிந்தும்
வாக்கரியகேற்பமுறலானேன் ஆக்கையினிற். (கசஙஃ)

பச்சைநரம்பெய்கமதிபத்துஞ்சுமந்துநிற்றங்
தொச்சமறப்பெற்றேனுன்னைமணிபோற் செச்சைநறு (கசசக)

நீராட்டித்தாராட்டிநீடம்புலிகாட்டிப்
பாராட்டிச்சீராட்டிப்பாதுற்றேன் ஓர்வேளை. (கசசஉ)

நோயணுகக்காணில்மனநோனுதொருமருந்துக்
காயடவிதோறுமலைந்துழல்வே னோயாம (கசசங)

லெத்திறத்தும்பட்டேனிராப்பகலோர்போதிலுங்கண்
ணித்திரைசற்றுண்டாநினைவுண்டா முத்தனையாய். (கசசச

நீபிறந்தோராண்டுநிறைவுறுமுன்னுந்தை
நீபறந்தகாட்டினிடைச்சென்றெரிந்தான் சோபமுற்று. (கசசரு)

வண்ணக்கலைமிழ்தமான்போலொளிமழுங்கி
மண்ணிற்படிந்தமணியேபோல் பெண்மைக (கசசசூ)

குரியநிறைவறுதாழியத்திற்புக்குண்
டரியபலகஷ்டமடைந்தேன் இருநிலத்தி. (கசசஎ)

லுற்றுருக்கும்ருறுதவேறுற்றல்லதுகை
யற்றுர்க்குகவியுமன்புண்டோ பெற்று. (கசசஅ)

ரிருந்தும்பயனிலவாலெல்வுயிருங்காக்கும்
பரம்பொருளேதஞ்சமெனப்பற்றி வருந்தியுனைப். (கசசஙஈ)

பொன்னுலலங்கரித்துப்போஷித்துருகிருந்து
மன்னர்மக்கள்போலும்லவர்த்தேனே தென்மொழியுஞ். (கசசுரு)

சாதிக்கொழிலும்வெகுகுந்திரமுமந்திரமும்
போதித்துவைத்தனர்நம்புண்ணியர்கள் காதலநீ. (கசசுக)

பெண்ணுஞ்சிறுபருவத்தேகன்மணமுடித்துக்
கண்ணுற்களித்துக்கதிபெறுவா னெண்ணியெண்ணி. (கசசுஉ)

பெத்தனையோபெண்ணமைந்துமென்னுளமொப்பாமலுஞ்சொர்
தத்திலிவள்நாத்திமகளாதலால் மொத்தையிரு. (கசசுங)

நான்குவருடஞ்சமைந்துநாற்றமெடுத்துக்கிடந்தாள்
நீங்கரியமூலிநிறங்கெட்டாள் யான்கருத்தும். (கசசுச)

நன்னுபெண்பாவமிவட்காதாரம்வேறிலைநம்
சொன்னபடிகேட்குஞ்சுகிர்த்துமுண்டாம் பின்னடியிற். (கசசுரு)

பெண்ணடியில்லாநமக்குப்பின்றளர்ந்தகாலமதி
லுண்ணொடியாதொட்டுமுதவுமென்றும் பெண்ணீ. (கசருசு)

ரணைகடந்தநீலிக்கழகில்லாதேனுங்
குணமிருந்தாற்போதுமெனக்கோரித் துணிப்புறநான். (கசருஎ)

வேணுமென்றுகொண்டுவந்தவெங்கஞ்சிறுக்கிமக
ளாணவமாயென்னையலமதித்தாள் கோணிமன. (கசருஅ)

நாணித்தலைகவிழநாவெடுத்துப்பேசவொட்டா
தாணித்தரமாயடக்கிவிட்டாள் வீணிலவச். (கசருகூ)

சேட்டையுறப்பேசித்தெருவிலுள்ளபேர்கடமைக்
கூட்டமிட்டென்குட்டைக்குலைக்கிறாள் கோட்டிகொண்ட. (கசகூo)

நாயினுங்கேடானேனோர்நாளேனுமத்தையென்று
வாய்குளிரச்சொன்னவசனமுண்டோ பேயுமஞ்சக். (கசகூக)

காத்திரநீலிக்கோலங்காட்டியவளாடுகின்ற
கூத்துக்குமத்தளநீகொட்டுகிறா யாத்தாளென். (கசகூஉ)

னன்புடையாட்கேனியடங்கிநடந்தாயிலையென்
றென்பொடியத்தீட்டவுன்னாலேலாதே வன்புரையா. (கசகூங)

யேண்டியகங்காரமுனக்கில்வளவாவென்றுபுடைத்
தாண்டடக்கினாலலவோ அஞ்சுவாள் ஈண்டெதிர்நீ. (கசகூச)

பார்த்திருக்கப்பேசும்பழிப்புரையைக்கேட்டுமொரு
வார்த்தைகண்டிப்பாய்ச்சொலவும்வாயிலையே சேர்த்த. (கசகூரு)

மனையாளைமஞ்சத்தில்மைந்தனைநெஞ்சத்தில்
வினையாளைவேலைமுடிவில் லெனைமுதியோர். (கசகூசு)

தக்கவுரைதேர்ந்துஞ்சரணஞ்சரணமென்றே
விக்கியவள்காலடியில்வீழ்கின்றா யெக்குலத்தி (கசகூஎ)

லாரு லுமுன்போலறிவிலரைக்காணேனீ
தாரு பெண்கொண்டாய்தரணியினில் மேனாளோர். (கசகூஅ)

வண்ணாரப்பையல்மனையாடனைக்குறித்தன்
றெண்ணாதிராமனையுங்கென்சொன்னான் கண்ணுறுக்கும். (கசகூக)

நாட்டமவள்கண்டுநடுநடுங்கவேண்டாமா
ஓட்டையெனக்கால்வழிநீரோடாதா சேட்டைபண்ணித். (கசகூo)

தாங்குவதனுலுன்றலையில்மிளகாயரைத்துத்
தீங்கரியசட்டஞ்செலுத்துகிறுள் ஈங்கிவள்தன். (கசஎக

ஞக்கையமுத்துறுக்கினுலன்றேவென்
தீர்க்கவயிராக்யசினந்தீரும் யேற்கையினீ. (கசஎஉ)

சன்னதங்கொண்டாடத்தலையணையின்மந்திரத்தா
லென்னவிதஞ்சொல்லியுருவேற்றினளோ பொன்னினுநற். (கசஎங)

ருயலவாவென்றுபக்ஷாத்தாபமின்றிநேற்றுவந்தாள்
மாயையிலேவீழ்ந்துமயங்கினையே தீயர்களு. (கசஎச)

மேசயிடங்கொடுத்தாயென்செய்வாயானுமதைப்
பேசுவதிலென்னபெறப்போரேன் பீசிலுனக். (கசஎரு)

காறுமுழந்தான்பெரிதோவப்பாநீநல்கிலெனக்
காறுமுளந்தானென்றுளாங்கெழுந்து சீறியொரு. கசஎசு)

மாமிக்கும் மருமகளுக்குஞ் சண்டை.

வன்புலிபோற்பாய்ந்துமருமகள்தன்மாமிமுன்னின்
றென்புகன்றுயின்னமியம்புவாய் முன்னமிரு. (கசஎஎ)

நாலுவருடஞ்சமைந்துநாற்றமெடுத்தாளென்றும்
மேலழகில்லாமூளிவேசையென்றும் ஞாலமதிற். (கசஎஅ)

சீர்துவாரற்றுத்திரிந்தவளைக்கொண்டுவந்து
வாய்க்கநடுமனையில்வைத்தனென்றுங் காந்தனிடஞ். (கசஎகூ)

சொல்லிப்பரிசழித்ததோஷிக்குரங்கேயுன்
பல்லைப்பிடுங்கவொருபல்லிலையே யல்ல. (கசஅ0)

தடக்கற்றநெஞ்சைவகிர்ந்தாறுகூறுக்கித்
தொடக்கும்றநாவைத்துணிப்பேன் விடக்கெடுத்த. (கசஅக)

வன்றுபற்றிப்பேய்நாடேவாயிலிடும்பானையே
சங்கைகெட்டுப்போனுயேதானையே பங்கமுற்ற. (கசஅஉ)

வெக்கங்கழுதாய்விருதா * வெறுங்கழுதா
யெக்கெக்கழுதாயிரப்புணியே பொங்கும்பா. (கசஅங)

துட்டவளர்த்தாலுமுயிர்தீர்விடமளிக்கும்
மோட்டாவையொத்தமுழுகேலி நாட்டிலுனை. (கசஅச)

---

* வெறுங்கழுது - வெறும்பசாசு.

நல்லவளென்றுருனைப்பார்நாறச்சவமேயுன்
சில்வாயைப்போர்த்துத்திருப்பட்டா வல்லிருளிற். (கசஅடு)

பூசலிடுபேய்க்கணமேபோழ்வாய்க்கிழட்டோரி
பேசுவதைப்பாரப்பாபெப்பெப்பே மாசுபட்ட. (கசஅசு)

வாருகோலா லுடலைவாட்டியெடுப்பேனுனக்கிங்
கார்சலிகைசொல்வாயறையிறேன் பாரெனவே. (கசஅஎ)

காறியுமிந்தாளிவளுங்காறியுமிழ்ந்தாள்மருகி
தூறியிரைந்தாளிவளுந்தூறினுள் மீறி. (கசஅஅ)

யிடித்தாள்மருமகளங்கீண்டெழுந்துமாமி
கடித்தாளொருகரத்திற்கவ்வித் துடித்தவளும். (கசஅகூ)

பற்றிமயிரைப்பிடித்தாள்பாழ்ங்கிழவிவவ்வால்போற்
றொற்றிமயிரைப்பிடித்துத்தொங்கினுன் சிற்றிடையிற். (கசகூ0)

றுத்தாரிப்பட்டுமெல்லச்சோர்ந்துநழுவியந்த
வித்தாரிகால்சறுக்கிவீழ்ந்திட்டா ளத்தருணம். (கசகூக)

மாலேறிக்கொண்டமருமகளைப்போட்டமுக்கி
மேலேறிக்கொண்டாள்விசைக்கிழவி கோலியமூ. (கசகூஉ)

தாட்டியானுலுந்தயங்குசமயத்தினல்ல
வேட்டைவந்துசாய்த்தால்விடுவளோ ஆட்டமெல்லாம். (கசகூங)

கண்டுவிலக்கியவன்காதலியைச்சீர்திருத்தி
நுண்டுகளைநீக்கிநொசிவகற்றிப் பண்டுபெற்ற. (கசகூச)

தட்டான் தாயைக்கோபித்தல்.

வன்னைமேற்கோபமதிகரிக்கப்பின்னுமன்னை
தன்வதனநோக்கியிவைசாற்றுவான் யென்னிருகண். (கசகூடு)

ணுட்டியுடனீசரியோ அஞ்சாக்கிழப்பதரே
போட்டிபண்ணிச்சீரழிஞ்சுபோகாதே தாட்டுறுத்தும். (கசகூசு)

பாதுகைபோலொத்துப்படிந்துநடவாவிடிலென்
பேதையவளப்படித்தான்பேசுவாள் வாதுபடு. (கசகூஎ)

பேயிறைஞ்சுநீர்மையினுள்பேசியெனைத்தூஷணமா
யாயிரம்வைதாலுமெனக்கானந்தம் வாயிற். (கச௬௮)

நிருகிருந்தசொல்லாற்சிலர்புறணிபேசி
யருகிருந்தாற்போதுமெனக்கன்பே யிருள்செறிந்த. (கச௬௯)

பாதகமலம்படிந்தபாவியேன்மீதிலவள்
பாதகமலம்படிலென்பாவம்போம் கோதி. (கரு௦௦)

லவளேயென்றெய்வமவளேயென்செல்வ
மவளேயென்கல்விநிறையாஸ்தி யவட்கினமுந். (கரு௦௧)

தங்கப்பணியிடுவேன்தாவுகுழற்பூமுடிப்பேன்
குங்குமப்பொட்டிட்டுமுத்தங்கொஞ்சுவேன் செங்கையினால். ()

மஞ்சளரைத்துக்கொடுப்பேன்வண்ணமலர்க்கால்பிடிப்பேன்
இன்சொற்படிநடப்பேனென்னிஷ்டம் நெஞ்சிலுனக். (கரு௦௩)

கேண்டிபொறுமையிதற்கேனோவயிற்றெரிச்ச
லாண்டான்கிடைத்தவளதிர்ஷ்டம் வேண்டியொற்றைக் (கரு௦௪)

லால்மேற்றவமிருந்துகர்ப்பமுற்றுப்பெற்றாளாம்
வால்தலையைக்கிள்ளிவளர்த்தாளாம் பாலப். (கரு௦௫)

பருவமணஞ்சூட்டியெனைப்பார்த்தாளாமுள்ளத்
தருமையுறக்கொண்டாடினாளாம் மருமகளோ. (கரு௦௬)

வைத்தவரிசைக்குமதியாதிவளையவ
ளத்தையென்றுசொல்லியழைக்கலையாம் மெத்தமெத்தத். (கரு௦௭)

தோதலித்துப்பேசுஞ்சுணைகெட்டமூளியுனக்
கேதமைத்தநான்கினிலொன்றேனுமே காதகியுன். (கரு௦௮)

கோலவுடல்கூனிக்குறுகித்தளர்ந்துமின்னஞ்
சாலவகங்காரந்தளர்ந்திலவே வாலிபரா. (கரு௦௯)

பெண்ணரியபேர்மடந்தாரியாதோவுன்வல்லுடலை
மண்ணரியுங்காலம்வரவிலையே திண்ணியவெண். (கரு௧௦)

கூற்றுவனுமுன்னுயிரைக்கொள்ளாதகலநின்று
ஆற்றியகின்கொடுமைக்கஞ்சியன்றோ வேற்றுருவ. (கரு௧௧)

நீலியெனவந்துதித்தாய்நீதொலைந்துபோமளவு
மோலமிட்டபூசலொழியாதே வாலொடுக்கிப். (கடுகஉ)

பேசாதேபோவெளியிற்பேயேயெனச்சினந்து
கூசாதேபூதிக்கொடைகொடுத்தான் நேச. (கடுகஙு)

மருமகனையன்றுமருவீடழைத்தான்
பரிசனமற்றியார்க்கும்பகர்ந்தான் மருகனுக்கு. (கடுகச)

நற்சரிகைக்கட்டுவர்க்கநல்கினனன்றன்மகட்குப்
பொற்சரிகைப்பூண்பலவும்பூட்டினன் பற்பலகாற். (கடுகரு)

பந்திவிருந்திட்டான்பலகாரலர்க்கமிட்டான்
புந்திமகிழ்சிருதவிப்போக்கினன் சந்ததமும். (கடுகசு)

வாதாட்டுவேசையர்கள்மாயப்படுகுழிக்குஞ்
சூதாட்டுங்கோலித்தொடர்புற்றான் காதாட்டிச். (கடுகஎ)

செல்லநகைபூணச்சிறுதேட்டுச்செல்லியன்னாள்
நல்கும்பொருளனைத்தும்நாசமாய் வல்விலங்கிற். (கடுகஅ)

நகைசெய்யக்கொடுத்தவள் தட்டானைக் கேட்குதல்.

காட்டானையுண்கனிபோற்கையிலொருகாசுமில்லா
தோட்டாண்டியானனொடுங்கினன் சூட்டு. (கடுகஙு)

நகைமுடிந்துதாவெனவுநங்கைவரிலெல்லா
நகைமுடிந்ததென்னநடித்துப் பகலிரவும். (கடுஉo)

பட்டரைவைத்தேவேலைபார்க்கிறதுபோலுமொன்றைத்
தட்டுவதுஞ்செம்புருக்கிச்சாய்ப்பதுவு மட்டழலிற். (கடுஉக)

பித்தளையைக்காய்ச்சியிந்தப்பேதைசெவிவிடைக்கச்
சுத்தியல்கொண்டெத்தித்துவைக்கிறதும் மெய்த்திடுமுன். ()

நேட்டில்நசைவையாதேசின்னாளிலிப்படியே
நீட்டுவல்லாரென்றுகம்பிநீட்டுவதும் மீட்டிவனை. (கடுஉஉ)

யேதிட்டுப்பாராமலேந்தியபின்னந்கொடியை
யேறிட்டிருப்பவன்போலேய்க்கிறதுஞ் சீறியதைக். (கடுஉச)

காட்டென்றுரைக்கிற்கடுகடுத்துப்பேசிவே
காட்டமுடனேர்தகட்டைக்காட்டுவதுந் தீட்டிநகை. (கருஉரு)

வேலையெலாந்தீர்ந்ததினிமேலிரண்டுநாட்பிடிக்குங்
கூலியினிற்சொச்சங்கொடாததேன் ஏல்வையொடு. (கருஉசு)

திட்டவட்டமாயொழுங்காய்ச்சேர்மானமாக்கியதை
யொட்டியபின்றோணுமுருப்படியாய்க் கிட்டுமெனச். (கருஉஎ)

சொல்லிவெகுநாட்கடத்தித்தோகையினிலேசில்லிடாள்
மெல்லவிதைவிட்டுவெளியேறிச் செல்லுலதே. (கருஉஅ)

தட்டான் ஊர் விட்டோடுதல்.

பேரளப்பென்றோர்ந்தவன்பெண்டீர்க்குமட்டும்வற்புறுத்திக்
கேரளத்தைநோக்கிவைச்சுக்கிண்ணினனே பாரியதன். (கருஉசூ)

நகைக்காரி புலம்பல்.

பொன்னிழந்தமங்கையிந்தப்போக்காளிபோனவிடம்
தன்னையறியாமற்றடுமாறி யென்முதலைத். (கருஙo)

தட்டானென்றெண்ணியல்லோசாதித்தேன்கட்புலனிற்
றுட்டானுபெங்குநின்றுசாதித்தா பெட்டாநாட்.(கருஙக)

போட்டுவிடுவேனெனவும்போதித்தசொற்போலும்
போட்டிபண்ணிவாயில்மண்ணைப்போட்டனையோ விட்டிலுந்தன்.

மல்கையுனைக்காணனென்றுமாரீசம்பண்ணுகிறு
ளெல்கேபறந்தாயிடந்தெரியேன் சிங்கலுற்ற. (கருஙஙூ)

கொள்ளைக்கழிச்சலுனைக்கொண்டுபோய்விட்டனவோ
நுள்ளத்துடிக்கச்சுருண்டாயோ கள்ளரவம் (கருஙச்)

பற்றிப்பிடுகினவோபாரச்சடாமுனிதா
னெற்றியுனைப்பாய்ந்தெங்கெறிந்தனவோ வெற்றிடியுன். (கருஙரு)

மீதுவிழுந்தனவோவெந்துகரிந்துகவிப்
போதிபமனூரிற்புகுந்தனையோ ஆகிநகை (கருஙசூ)

முற்றுங்கவர்ந்துவெறுமூளியாக்கினையே
பற்றியெரியுதடாபாழாவாய் பெற்றமகன். (கடுகூ.)

தன்றலையின் மீதடித்துச்சத்தியமுஞ்செய்தனையே
நன்றுடையானென்றலவோநம்பினேன் என்றலைவன். (கடுகூஅ)

புற்றுக்குரைத்ததுபோதித்தபுத்தியெல்லாஞ்
சற்றுமதியாதுவிட்டேன்சண்டாளி மற்றுமிந்த. (கடுகூசு)

ஊரிலுள்ளபாவிகளுமுண்மையுரைத்தாரிலையே
யாருஞ்சத்ராதியெனக்கானாரே போராடிப். (கடுகூ0)

பற்பலநாளென்கணவன்பல்லைக்கடித்தீந்த
சொற்பச்சாமானதிலுஞ்சோமாறி யற்பகலா. (கடுகூக)

யீயாயெறும்பாயிதுகாலங்தேடியதைப்
பேயாங்குகாத்திருந்தபெற்றிபோம் நேயாமற். (கடுகூஉ)

பையடக்கமாகப்பவுன்பவுனாய்வைத்திருந்த
கையடக்கமெல்லாங்கவிழ்த்தேனே வையமதிற். (கடுகூ.ங)

நீதறவீயார்பொருளைத்தீயார்கொள்வாரெனவு
நீதிமொழியென்னினிசமாச்சே காதலனோ. (கடுகூச)

வேற்கையிலேதம்மாவிராவேபொறுனேமுன்
மூர்ககனவன்பொல்லாமுரடனே தோற்குமிதைக். (கடுகூடு)

கேட்டாளேயாகிற்கிடுகிடுக்கவேமூணும்
போட்டுக்கடாவிப்புடைப்பானே மூட்டிவசை. (கடுகூகூ)

மாற்றமுறப்பேசியெந்தன்வங்கிஷத்திலுள்ளவர்க்கு
மேற்றயட்டுமேற்றியிறக்குவனே தூற்றிமொத்தி. (கடுகூஎ)

வாயிலவனேர்ந்தபடிவைதாலும்வைதிடட்டும்
பாயிலிலென்கிட்டப்படுக்கானே நோயென்ப. (கடுகூஅ)

தெத்தனையுற்றாலுமருந்தேயுண்பதில்லையிச்சா
பத்தியத்துக்கல்லோபயந்துநா னித்யாதி. (கடுகூகூ)

பொன்னுக்குப்பொன்னிழந்துபோகசுகமிழந்திங்
கென்னத்துக்காய்காணிருக்கிறேன் அன்னன்னோ. (கடுகூ0)

சுற்றத்தார்க்கேதேனோசூழ்கருங்கூந்தலார்தார
மற்றவர்க்கேதேனுமளித்தேனோ மற்றுமடன். (கடுகூக)

கோவில்குளமுண்டுபெண்ணிக்கோடிபலன்பெற்றேனே
பாவியிலும்பாவியெனப்பட்டேனே தீவினையே. (கருருஉ)

னென்செய்வேனென்செய்வேனென்றுருகிக்கன்றியவள்
பன்முன்றுநாளாய்ப்பரிதபித்துப் பின்னிதனைக். (கருருங)

கொண்டவற்குச்சொல்லமனங்கூசிப்பயந்தூமை
கண்டகனுப்போலுங்கலங்கினளே மண்டலத்தி. (கருருச)

லிப்படியேமாதரெழிலார்ந்தமுற்பணியுங்
கைப்பொருளுந்தோற்றக்கழிந்தவரா யெப்பொழுதும். (கருருரு)

பொற்பிழந்துசித்தப்புலனிழந்தங்கூணிழந்து
பற்பிளந்துகூவிப்பதைத்தனராற் சற்புருடர். (கருருசு)

சிறுமிந்தாரேனுந்திகழ்பணியிற்சிந்தையுண்டோ
நாரிகட்கேனிந்தநகைமயக்கம் நாரியர்கள். (கருருஎ)

நாணமடமச்சம்பயிர்ப்பெனுநால்வகையாம்
பூணையணியாய்ப்புனைந்தறனைப் பேணியுந்தன். (கருருஅ)

கற்பியல்வழாமற்கடிமனையைச்சுத்தமிட்டுப்
பொற்புடனேபோறும்புனலாடி யிற்புகுந்து. (கருருகூ)

சட்டாசவுண்டிதயாரித்தவர்கணவற்
கிஷ்டமுடனூட்டலியல்பன்றிச் செட்டிதட்டான். (கருசூ0)

வீடேகெதியாய்மெனக்கெட்டலைந்துசுடு
காடேபோமட்டுங்கலன்கலனென் றாடவரை. (கருசூக)

மோதும்பிடாரிகளைமுற்றுந்துறந்துவன
மீதுறையும்வாழ்க்கைமிகநன்றே தோதகஞ்செய். (கருசூஉ)

மாதர்மனைமிதியேன்வாயுறவுஞ்செய்தறியேன்
காதலனைப்பேணுங்கவலையன்றி யாதுங். (கருசூங)

குறியேன்கொடுங்கூற்றுயிர்கொண்டுபோம்போ
தறனன்றிலேறுதுணையாமோ திறமையுணர்ந். (கருசூச)

நில்லுக்கிசைந்தொழுகாளேற்றமிருகூற்றமெனுஞ்
சொல்லுக்கிடம்படுத்திச்சோராமல் நெல்லுக். (கருசூரு)

குமியேபோலாதரமுற்றும்மிதபமேற்கத்
தமியேனடாத்திவருந்தன்மை கமைசான்றம் (கருசுசு)

சித்தமறிவிரிதுநாட்டீராக்குடும்பபா
ரத்தையும்மிலேற்றியமிழ்த்தாம லத்தனையும். (கருசுஎ)

யானேபொறுத்துநின்றேனல்லதுவேறும்மிடையா
தேனுமொருதொந்தரவுஞ்செய்திரேன் மாநிலத்தோர். (கருசுஅ)

சித்தமகிழ்ந்தியற்றுந்தீபாவளிப்பெருநா
ளித்தலத்தினுளையிராவெய்தலா லத்தையிவர் (கருசுகூ)

மேனலஞ்செய்யாதுமிகச்சுருக்கிச்செய்தனனென்
றீனமெவர்சொல்வர்நமதிஷ்டமே யானதினு (கருஎ0)

லுள்ளதுகொண்டேபுரிகுவோமென்றிவளுரைக்க
வுள்ளமகிழ்ந்தன்னவனுமோதுவான் றுள்ளி. (கருஎக)

நரகாசுரன்மடிந்தநாளிற்பெருமான்
சரணம்புயமலரிற்றுழ்ந்து மரணமுறு. (கருஎஉ)

மிந்நாளேநன்னாளாயெங்குங்கொண்டாடவரந்
தன்னாற்படைத்திருக்குந்தன்மையால் இன்னநல. (கருஎகூ)

மன்னுபுண்யகாலமருவுபலனைப்பெறநா
னென்னவகைசெய்வேனிளமயிலே பொன்னுடையார்.(கருஎச)

நாயகன் நாயகிக்கு லேவாதேவி விஷயங்கூறல்.

தன்பாற்கடன்வாங்கித்தான்புரிவோமென்னிலது
வன்பாய்விளைத்துவருங்கெடுதி பொன்கேட்பாற் (கருஎரு)

கெவ்வளவுசொத்திருக்குமென்பதையாராய்ந்துநன்றாய்
யொவ்வியசொத்தாயிரத்துக்கோர்நூறே வவ்வுதற்குப். (கருஎசு)

போதுமெனக்கொண்டுமக்கிப்போதுதுகைநல்குதற்கிங்
கியாதுமிலையாகிலிருந்தாலும் ஓதுமொரு. (கருஎஎ)

நூற்றுக்குக்குன்றுதுநோக்கப்படிகொடுப்பேன்
ஏற்றமில்லைநூற்றுக்கிரண்டரையாம் போற்றுமதை. (கருஎஅ)

யாறுமாசக்கெடுவிலாய்ந்துசெலுத்தாதுவிடி
லூறில்கடன்பத்திரமுற்பத்திமுத லீறுவரை. (கருஎகூ)

ஐந்துவட்டியாகவுமவ்வாறுமாத்தைக்கொருக்கால்
முந்தைமுதலோடுமுதலாக்கி யிந்தவித. (கருஅ0)

மாச்செலுத்தவேண்டுமீதன்றிமறுபேச்சிலையென்
றார்ச்சிதமாய்ச்சொல்லவவனொப்பியே வாய்ச்சபடி. (கருஅக)

பத்திரமுமீடுகண்டுபாங்காய்ரிஜிஸ்தர்செய்து
மத்தொகையிற்கால்வாசியாமுசிதம் பத்திரத்தின். (கருஅஉ)

கொள்கிரையம்நெட்டெழுத்துக்கூலிரிஜிஸ்தர்ச்செலவோ
டெள்ளரியசேவகர்க்கிளும்செலவு துள்ளுவண்டி. (கருஅங)

வாடகைமற்றின்னசெலவாமென்றுந்தள்ளிமிச்சங்
கூடியதைக்கையிற்கொடுத்தபின்னர் ... நீடிநாட். (கருஅச)

கேளாதுவிட்டுக்கெணிதவட்டியேறுமட்டும்
வாளாவிருந்தந்தவாயிதா நாளோர்ந்து. (கருஅரு)

சேர்ந்தமுதலத்தனைக்குஞ்சீவில்வழக்கிட்டுமிகத்
தேர்ந்தசெலவோடுமதைத்தீர்ப்பாக்கி யாந்தரங்க. (கருஅசு)

மாகச்சபுத்திவாரண்டுப்பியோனெடுதன்
பாகத்திருவர்களைப்பாலித்து வேகமுடன். (கருஅஎ)

சென்றிடுர்சித்திபெறச்செய்வீரென்றேலவவர்
பின்றிடுரென்றுவிழும்பேரிடியோ லன்றுபுகுங் (கருஅஅ)

தாடுகளைமாடுகளையாஸ்திகளைவீடுநுழைந்
தோடியுப்புச்சட்டிவறையோடுமுதல் நீடுமனை. (கருஅகூ)

காணிகளாயாவுங்கவர்ந்துகுடியோட்டிவிட்டார்
கேணியவன்குடும்பங்கெட்டனவே நீணிலத்தி. (கருகூ0)

விப்படியேபல்லாரிவர்பாற்கடனேற்றுத்
துப்புரவாய்க்கெட்டார்சொலவரிதே ஒப்பரிய. (கருகூக)

பானைபப்பட்டுத்துரைகள்பால்வலியச்சென்றுசிலர்
நீணுமனைவர்த்திநிகழ்செலவுக் காள்வினையாய். (கருகூஉ)

நாங்கள்தருவோமீங்குநல்குமுதலுக்குவட்டி
தாங்களென்னபோட்டாலுஞ்சம்மதமே யோங்குபணம். (கடுகூகூ.)

காசுபெரிதல்லக்கனமுள்ளதங்கள்சித்த
நேசமதேகோடிநிதியாகும் வீசுமுதல். (கடுகூச)

நூற்றுக்கரைவீதம்நோட்டெழுதித்தந்திடில்யா
மேற்றமிகுந்ததுகையீகுவேம் தோற்றமுள்ள. (கடுகூரு)

மாமதுரைசென்னைமருவும்பினங்கிரங்கோன்
பாமருவுபம்பையுயர்பங்காளம் க்ஷேமமிகு. (கடுகூசு)

நாகப்பூர்சிங்கப்பூர்நாகைதிருநெல்வேலி
வாகொப்புகொச்சிமலையாளம் மாகொழும்பு. (கடுகூஎ)

தில்லிஐதிராபாத்துசித்தூர்கடப்பைமுத
லெல்லுலவுதேசமெல்லாமெம்புழக்கந் தொல்லுலகி. (கடுகூஅ)

லெவ்விடத்துக்கானுலும்பாங்கள்தருமுண்டியலே
யவ்விடமெல்லாஞ்செல்லுமாகையாற் செவ்வியநற். (கடுகூகூ)

சித்தம்போல்யாங்கள்திறம்பாதொழுகுவமென்
றெத்தியிவர்சொல்லுமிழுக்குரையை நத்திநித. (கசுஙஙு)

மல்காமற்சொற்பசொற்பமாகத்தொகைவாங்கிப்
பல்காலும்நோட்டெழுதிப்பாலிக்கப் பில்குசிறு. (கசுஙக)

தூறல்பெருவெள்ளமெனத்தொக்கிப்படர்ந்தனபோ
லூறிலக்ஷலக்ஷமாயோங்கினவே மாறியிவ. (கசுஙஉ)

ரீட்டுதுலைவட்டியிரண்டரைதிப்போதுறலாற்
காட்டுமரைவட்டியினிக்கட்டாது நோட்டெனை. (கசுஙங)

யொன்றுய்த்திரட்டியொரேபத்திரமாக்கிப்
பொன்றுதிரண்டேனும்போடுங்கள் துன்றுவள. (கசுஙச)

மேந்துசமுத்திரத்துக்கேதல்குறைவில்லெனபோல்
வேந்தர்களுக்கீதோர்விஷயமா ஆய்ந்துசித்தம். (கசுஙஙு)

மாமகிழ்ச்சிகூர்ந்துமறுபத்திரமெழுதிச்
தாமதமில்லாதுதருதிரெனப் மாமுகடும். (கசுஙசு)

நீள்சிலைப்பேனுநிமிண்டிக்கறிப்பனபோற்
சூளிலர்விடாமற்றொடர்ந்துபற்றக் கேளிரென. (கசு0எ)

வின்னவர்கணம்பாலியம்பிநின்றகட்டுரையும்
பின்னதற்குமாறுபட்டபேதகமுந் தன்னுளத்திற். (கசு0அ)

கண்ணேர்ந்துமற்றிவர்சங்காத்தமினிப்போதுமெனக்
கொண்டெழுகால்வாட்டிகுறிப்பிட்டுத் தண்டமிழிற். (கசு0சு)

தீர்க்கமுடையான்சிவகங்கைவாழிசுலா
மார்க்கமதினின்றவான்முறையான் கார்க்கடல்சூழ். (கசுகி)

லையம்புகழுமகம்மதிசுமால்நெநொட்
செய்யுந்தவத்தில்வந்தசீராளன் துய்யநெறிச். (கசுகக)

செல்வத்துரைத்தனத்தார்செய்தசட்டம்லாக்கள்முற்றுங்
சுல்பிற்பொதிந்தகளஞ்சியவான் பல்குபல. (கசுகஉ)

பத்திரங்கள்சாசனங்கள்பாகசுவிகாரமுயில்
எத்தனையோலாவுக்கிசைந்தபடி சித்தமொத்து. (கசுகங)

முற்றீட்டலேயசலாய்முன்னிமுடிக்குந்திறவான்
சுற்றீட்டமேவுந்தொடர்பினன் கொற்றமிகு. (கசுகச)

மன்னவர்கொண்டாடுமெதாருசிக்கந்தரெனு
மின்னிசையான்றன்னையினிதழைத்தே யன்னவனுற். (கசுகரு)

பத்திரமுந்தீட்டிப்பயில்ரிஜிஸ்தர்செய்துநல்கச்
சித்திபெற்றோமென்னுஞ்செழிப்புளராய் தத்தமூர். (கசுகசு)

சென்றுரிருந்தார்செலும்வாயிதாப்படுமுன்
மன்றேறிக்கோர்ட்டில்வழக்கிட்டே வென்றுபெரு. (கசுகஎ)

மான்களென்றுமெண்ணுமல்வன்ஜபுத்திக்கட்டளைகொண்
டாங்குபுகுந்தேறியரண்மனையைப் பாங்கொடுசூழ்ந். (கசுகஅ)

தேற்றவிலைபெற்றபொருள்யாவுங்கவர்ந்துகொடுங்
கூற்றமெனக்கோர்ட்டிற்கொடுபோகி மாற்றவின்றி. (கசுகசு)

பின்னிதவேலத்தில்விட்டும்பெட்புறுஜமீன்சிலதைச்
சின்னபின்னமாக்கிச்சிதறிவிட்டா ரின்னலர்கள். (கசுஉ0)

புன்மையுலகத்தவாமேற்புல்லுருவியென்றறிந்தும்
நன்மதியுண்டாவதொருநாளுமில்லை மென்சிறையாட். (கசுஉக)

முதலாளியைவஞ்சித்து கடன்வாங்குதல்.

காட்டிகலையாதுமுட்டைதானெடுப்பான்காற்செருப்பை
மீட்டொருவன் றான்கவர்ந்தவிந்தைபோல் நாட்டவரை. (கசுஉஉ)

யெத்திமுதல்சேர்த்தவனையெத்தத்துணிந்துகடுஞ்
சித்தனொருவன்சிறந்தசெல்வனைப்பாய்த் தத்திமிகத். (கசுஉஊ)

தூண்டுபரியேறிச்சுடர்வேகடட்பணிகள்
பூண்டிருவரேவல்புரிந்துவர வீண்டிமுத. (கசுஉச)

லாளிதனைக்கண்ணுற்றளாவிப்புகழ்ந்துமையிற்
றாளிலுறவுற்றதுநற்றவமே கேளுநமக். (கசுஉரு)

காஸ்தியளவிலையானுலுமிதுநற்சமையம்
பூஸ்திதியாங்கொள்ளும்பொருட்டுற்றோம் தீர்த்தபதி. (கசுஉசு)

ஞயரத்திற்பாதிநம்பாலானமற்றப்பாதியைநீ
ரீயுமுசிதங்கால்சேர்த்தெண்ணம்போ லாயவட்டி. (கசுஉஎ)

கூட்டியொரேமொத்தங்குறித்ததினத்தினம
தாட்டலைவர்தன்பாலனுப்புவோம் மீட்டுகெடுத். (கசுஉஅ)

தாண்டினுற்பத்ரஞ்சனித்தமுதலுடையார்
வேண்டும்போதைந்துலட்டிவிதமா யாண்டுதொறும். (கசுஉகூ)

வட்டிக்குவட்டியிட்டுவாஜீபியாய்ச்செலுத்தக்
கட்டுப்பாடுற்றோங்கருத்திலெனப் பொட்டிமகன். (கசுஊ0)

வீசங்காசேனும்விடாமேலழுத்தமுள்ளவனை
யாசையெனும்பம்பரத்திலாட்டியே மாசுழன்று. (கசுஊக)

மக்குப்பிடித்திருக்கமாயமென்னசெய்தானோ
சொக்குப்பொடிமருந்தைத்தூவினனோ சிக்கிமுழுக். (கசுஊஉ)

கல்லானநெஞ்சுங்கரைந்துமெழுகாயுருகிப்
பொல்லாதகாலப்புணர்ப்பினு லொல்கியவன். (கசுஊஙு)

சொத்தொன்றும்பாராமற்றொல்லீடுங்காட்டாமற்
பத்திரமுந்தீட்டிப்பணமீய வித்தொகையிற். (கசுரூச)

கால்கஷ்டியாமெனக்குக்கைமேலுமக்கிதில்முக்
கால்கஷ்டியாமென்வுங்கைகாட்டி மேலுமினி. (கசுரூரு)

யுன்னுலியன்றதுபாரோகோவெனவுளத்துற்
றன்னுலூர்புக்கானகமகிழ்ந்தே பின்னரிழி. (கசுரூசு)

வானகெடுருதுவிளையாடல்விலைமாதர்மது
பானமதில்மூழ்கிப்பணமுழுதுந் தானிழந்து. (கசுரூஎ)

வீணுளாயுற்றவனைமிக்கமுதலாளிதினம்
வீணுளாயுற்றுவெறிதலைந்து நாணமுறக். (கசுரூஅ)

கெஞ்சியடிக்கடிபோய்க்கேட்டவுடனேயவனும்
வெஞ்சமுறச்சீறிவெகுமிடுக்காய் வஞ்சகநீ. (கசுரூகூ)

முதலாளியைதூஷணமாய் திட்டுதல்.

யெப்பத்தொகைகொடுத்தாயேதுமுழுமோசமிது
பொய்ப்பத்திரமோபுதிப்பித்தாய் தப்பிலியென். (கசுசஅ)

கையெழுத்தேபோலுமிதுகற்பனைபாரிப்படியா
வையகத்தையெத்திமயக்கிஞ்ய் செய்திடுமிப். (கசுசக)

போர்ஜரியின்குற்றமிதேபோதுமுன்னைலேசில்விடேன்
வேர்வொழுமாட்டிவிலங்கிட்டுச் சார்ஜ்பண்ணித். கசுசஉ

தீட்டியோரேழ்வருடந்தெண்டிப்பேன்டியாம்பகர்கம்
வீட்டுளேன்வந்தாய்வெளியேயில் கோட்டுக்குப். (கசுசகூ)

போய்வழக்குச்செய்வையங்குப்போந்துநெஞ்சையீர்ந்துனது
வாயில்மண்ணைப்போட்டுவருகிறேன் றேயமதிற். (கசுசஙு)

செங்கோற்றுரைத்தனத்தார்செய்தசட்டதிட்டமெலா
மங்கோர்ந்தேன்முற்றுமவதானம் இங்லீஷிற். (கசுசரு)

பீயேபீயல்முதலாய்ப்போபெரியதேர்ச்சியுற்றி
ராயபகதுரெனும்பேரெய்தினேன் கேயமுள்ள. (கசுசரு)

லாயர்களென்பாலனுகிலாப்பயிண்டின்றும்பரியத்
தாவிபொருடேர்ந்தனர்களாதலால் நீயோ. (கசுச௪)

விழுக்குடையசுத்தமுட்டாளென்னுடன்வாதித்து
வழக்கைச்செயிக்கவோவல்லாய் பழக்கத்தா. (கசுச௮)

லின்னபாரிஸ்டருனக்கேற்பட்டுவந்தாலுஞ்
சின்னபின்னமாக்கியதைச்சேதிப்பே ளிங்கிலத்தில் (கசுசகூ)

முந்தியதாம்பூலமுதல்நிம்மரென்றுலகி.
லெந்திறமைநீகேட்டதில்லையோ யிந்தவித்தை. (கசுரு0)

யெங்கேபடித்தாயெவருனக்குப்புத்திசொன்னு
ரங்கேபோய்ச்செய்வாயதுபலிக்கும் வெங்கொல்லர். (கசுருக)

வீதிதனிலுசிவிலைவிற்றால்விலைப்போமோ
யேதெனைநீமேற்றவர்போலெண்ணியோ சோதித்தா. (கசுருஉ)

யப்படியாசெய்திநல்லதாகட்டுமபார்சம்த்தைத்
தப்படியிம்மட்டாசதிமோசங் கப்படியாற் (கசுருங)

கொட்டினுற்றேளின்குணமறிவாரிக்கலியிற்
கட்டுரைசேர்நல்லதற்குக்காலமில்லை துட்டர்மித்ர. (கசுருச)

பேதத்தாலுன்மதியைப்பேதிக்கச்சூதுவித்தை
போதித்தார்தம்மைப்புகன்றிடா யேதவனைச். கசுருரு)

சும்மாவிடேன்வலுவிற்றூண்டில்மீனைப்பவிழுத்
தம்மாவென்றேங்கியலறியழப் பம்முதலா. (கசுருகூ)

யேவுதற்குற்றத்திற்கிருகால்விலங்க டியா
தேவிடிலென்றீரமிருந்தென்னபயன் மாவலிய. (கசுருஎ)

ரெல்லோருமென்னோடெதிர்த்துமுடியாதுகடற்
கல்லோலமென்னக்கலக்கமுற்றார் வெல்லுமெனப். (கசுருஅ)

† பாரொருத்தன்மேற்பாயும்பான்மையெனவந்தாய்நீ
வேறொருத்தனுல்விடுவேனோ தேறவுநீ. (கசுருகூ)

---

* கப்படி-கொடுக்கு. † பாறு-பருந்து ஒருத்தல்-பரனை.

யற்பனமக்கீடிலனென்றந்தோ.யவுவைத்து
வற்புறுத்தல்பண்ணுதுமன்னித்தேன் சற்பனையாய்த். (கசுசுஅ)

தொட்டிலையுமாட்டித்துடையினிலுங்கிள்ளுகின்ற
பட்டிமக்களுரிற்பலருளரால் கெட்டவர்கள். (கசுசுக)

சொல்வார்த்தைகேட்டுச்சுகமிழந்துபோகாதே
நல்வார்த்தையாகுமென்சொல்நம்புவாய் செல்போதக். (கசுசுஉ)

கையிருப்பையார்க்குங்கடனுடன்கொடாமலினிப்
பையிருப்பிற்கட்டிப்பதுக்குவாய் பொய்யிலையான். (கசுசுங)

செப்பியநன்மார்க்கந்தெரிந்தனவோநீயிங்கு
கப்புச்சிப்பென்றுசத்தங்காட்டாம லப்புறம்போ. (கசுசுச)

வென்றுபலவாறுபெடுத்தேறிப்பேசமனம்
கன்றிமுதலாளியிருகான நிங்க நின்றுநகி. (கசுசுரு)

முதலாளிமனம் வருந்துதல்

எண்ணுதுமெண்ணியிடைந்திப்பொருளைக்கூட்டுதற்குப்
பண்ணுதசெட்டுகளைப்பண்ணிமனம புண்ணுய்த். (கசுசுசு)

துலைதூரதேசமெல்லாஞ்சுற்றித்திரிந்தக
கலைவாய்க்கடற்குளமிழந்திப் பலதொல்லைப் (கசுசுஎ)

பட்டேனுமுன்றேன்பரதவிக்கப்பெண்டிர்பிள்ளை
விட்டேனலைந்தேன்மெலிந்துநான் கஷ்டமுட. (கசுசுஅ)

றுண்ணுதிரவலர்வந்தாணென்றுற்குட்டியிட்ட
பெண்ணுய்போற்சீறிப்பிதற்றியே மண்ணிற். (கசுசுகூ)

படைத்தமுதலையிந்தப்பாவிதனக்கேயொப்
படைத்துமுதலைநொந்தேனந்தோ கிடைக்கரிய. (கசுஎ0)

இஷ்டாரைவட்டிக்கங்கியுமெனக்கேட்டவர்க்கா
கட்டுமென்றுநாளைக்கடத்தியே ‡ தட்டல்வட்டிப். (கசுஎக)

பேராசைபூண்டுபெருத்தொகையிழந்த
சீரானனென்போற்றெளிந்ஞரார் பார்மீது. (கடுஎஉ)

---

‡ தட்டல்-ஐந்து

நீதவட்டிக்கியாதநீதவட்டிக்கீந்தமுத
லாதல்போற்றோன்றியழியுமென வேதநூ. (கசுஎகூ)

லாய்ந்திருந்துமாசைக்களவில்லையென்பனபோ
லோய்ந்துமதிகெட்டேனுணங்கினேன் வாய்ந்தவிநம் (கசுஎச)

முதலாளி தெய்வபிரார்த்தனை பண்ணல்

பிந்திரனீடேறவெழுபாரறமீற்க்
கொந்தளிக்குமன்பர்குறைதீர வந்துதித்த. (கசுஎகு)

பன்னிருகைவேலாபழிக்கஞ்சுந்தேவேமீ
னன்னவிழியாய்கூடலம்பிகாய் முன்னே. (கசுஎசு)

வடங்காரலைத்துயிலுமாலேநீரிந்தக்
கடன்காரனெஞ்சைக்கரைத்துக் கொடுஞ்சனியன். (கசுஎஎ

வட்டியொன்றும்வேண்டாமுன்வாரிக்கொடுத்தமுதல்
மட்டும்வந்தாற்போதும்வழக்கிலையே நஷ்டத்தாற். (கசுஎஅ)

* நேலிக்கையுற்றிடுமென்செங்கைவசமாக்குதிரேல்
நாலத்தோர்பங்குமக்குநல்குவேன் மேலுற்ற. (கசுஎகூ)

பொன்னுபரணம்புயங்காபரணமுடன்
சொன்னுபிஷேகமிட்டுச்சூட்டுவேன் முன்னோர்ந்த. (கசுஅ0)

காணிக்கைக்கெல்லாங்கணக்கிட்டுவட்டியுடன்
பேணிச்செலுத்திப்பெருக்குவேன் வேணியினில. (கசுஅக)

திங்களணிமாரியற்குத்திட்டிக்கிடாயும்வெட்டிப்
பொங்கலிட்டுங்கோவிற்புதுக்குவே னெங்குடியைக். (கசுஅஉ)

முதலாளி கோர்ட்டில் வழக்கிடுதல்

காப்பாற்றுமென்றுகனதெய்வம்போற்றியுயர்
தாப்பானஞாயஸ்தலம்புகுந்து தீர்ப்பாக்குஞ். (கசுஅகூ)

சாரரந்தெரிந்தவக்கீல்தம்மையடுத்துண்மையிலோர்
வாரமதிற்கோட்டில்வழக்கிட்டா னோர்பிரதி. (கசுஅச)

---

* தேலிக்கை-கனக்குறைவு

வாதிக்கறிக்கைமுந்திவந்ததுகண்டேங்கியிதற்
கேதுசெய்வோமென்றிவனுமெணணியே சூதுங். (கசுஅரு)

பிரதிவாதி சாக்ஷியேற்படுத்தல்.

திருட்டுமுருட்டுமிகத்தோந்தகசவஞ்சப்
பிரட்டரிட்டமுத்துப்பேசி மிரட்டுமிதி. (கசுஅசு)

லென்தரப்புச்சாக்ஷிகளாயெண்ணியுமைக்கோருகிறேன்
நன்றிறமையோடிதுபோற்சாற்றுவீர் முன்பவர்கள். (கசுஅஎ)

கற்பனையாயிப்பத்திரங்கணிர்ந்ததேதியினி
லப்பில்விஷயமொன்றையாலோசித் திப்பிரதி. (கசுஅஅ)

வாதியுடன்யாங்கள்சென்னைவைகியதெதார்த்தமந்த
வீதியிலுள்ளார்க்கும்விதிதமா மோதுமிவன். (கசுஅகூ)

பொன்னுடையானல்லபுகழ்தீரசுத்தமுள்ளான்
பன்னுமறமுள்ளான்படிறுரையான் இன்ன. (கசுகூஎ)

கடன்வாங்கலுண்மையென்றுங்கட்டுப்பாடான
படுமோசத்தாலியற்றும்பண்பே யுடையதென. (கசுகூக)

நீவிரிருவருந்தானிச்சயமாயச்சமற்றங்
கேவறநற்சாக்ஷியியம்புவீர் சீவில்முன்னம். (கசுகூஉ)

பூகத்துக்கொல்காமற்பொய்யையொரேமொழியாய்ச்
சாதித்தாலெவ்வழக்குந்தள்ளலாகு சூதுற்ற. (கசுகூங)

வாதிலக்கீலும்மைமருள்படக்கிராசுபண்ணிப்
பேதிக்கச்செய்துபிரட்டுவான் போதிலுளங். (கசுகூச)

கன்றியுணர்ச்சிகெட்டுக்கைமறந்துமெய்மறந்தங்
கொன்றுகிடக்கொன்றையுளறிவிட்டு நின்று (கசுகூரு)

விழியாதீர்மெத்தவிழிப்பாய்நான்சொன்ன
மொழிபோலுஞ்சாக்ஷிமொழிவீர் வழுவிதென. (கசுகூசு)

கீரஞ்சவேண்டாம்நிகழ்சீமைலாயர்களை
யீரவிவிசாரவிழுக்கிறேன் நேரே. (கசுகூஎ)

மறுவாதிவக்கீல்தனக்கும்வாய்பூசி
யறுசரித்துக்கொள்வோமடக்கி மலகார. (கசுகூஅ)

வாஸ்தவமாயுந்தமக்கோர்மாசெய்தாதெய்திலுமென்
ஞஸ்திமுற்றும்பாராதழித்திடுவேன் தூத்தேரி. கசுகூசு)

யாட்டுமுடந்தனக்கோரானைப்பலிகொடுப்பேன்
வாட்டமினியேனைமருளாதீர் கேட்டீரா. (கஎ00)

யிவ்வழக்கைப்பற்றிநமக்கிஷ்டரொடுபேசியகால்
மைவளைக்கைமாதர்மருணீங்க மெய்வளர்த்து. (கஎ0க)

சாக்ஷிகளுக்கு குலதெய்வம்வந்து சொன்னதாய்
தபிரியங்கூறல்.

நம்புகுலதெய்வமின்றுநாடியருள்கூர்ந்தெனது
தம்பிதுரைச்சாமிதன்மேற்சன்னதமாய்த் தும்பிகொட்டி. (கஎ0உ)

மூதண்டமாயிறங்கிமோதியெனைப்பார்த்துறுமித்
தீதண்டஞ்செய்கைதெரிந்தாயா நீதம்பீ. (கஎ0ங)

யேண்டாயெனைமறந்தாபித்தனையுஞ்செய்தவனுன்
தாண்டாயென்பூசைதவிர்ப்பனவோ மூண்டவுன்பங். (கஎ0ச)

காளியுடன்சண்டையிட்டஞ்சாறுண்டளவுமென்னை
யேளிதமாய்த்தேடாதிருந்துவிட்டாய் நீளியவுன். (கஎ0ரு)

முன்னவர்கள்பூசைமுறைதவறுதெஞ்ஞான்றும்
நன்னயமாய்க்கொண்டாடிநண்புற்று ரன்னவர்கள். (கஎ0சு)

பூமியினிலிட்டவித்தும்பொன்னுய்விளையவிஷ்ட
காமியங்களெல்லாங்கதித்தோங்க மாமகிழ்ச்சி. (கஎ0எ)

யாயவர்க்குநானேயருகிருந்துவேண்டியச
காயமுறச்செய்துகாப்பாடிவந்தேன் நீயொருத்தன். (கஎ0அ)

நல்லகுடிக்குநடுநாயகம்போலுஞ்
செல்லமகன்வந்துசெனித்திட்டாய். தொல்லுலகிற். (கஎ0கூ)

நெய்வமிகமேலாலயந்தொழுகைசெய்யநன்றென்
றவ்வைநூல்கற்றுமலைக்கழித்தாய் கவ்வையினுல். (கஎகஎ)

கைந்தவனக்கின்றுவரும்நாளைவரும்புத்தியென்று
புந்தியிலிந்நாளும்பொறுத்திருந்தேன் வந்துவந்து. (கஎகக)

பன்னுட்கனவிற்பகர்ந்துமிகழ்ந்தாயினிமே
லென்னுற்பொறுக்கவியலாது தன்னகத்தால். (கஎகஉ)

விஞ்சுசுடர்கான்றிதேன்வீட்டுவிளக்கென்றுமுத்தன்
கொஞ்சிடிற்சுடாமற்குளிருமோ நெஞ்சினிலன். (கஎகங)

புற்றவனீயானாலுமுள்ளறிவுகாட்டிவைத்தேன்
மற்றுனக்கிப்போதுபுத்திவந்தனவா மூற்றும். (கஎகச)

பொறுத்தேன்பிழையனைத்தும்புண்படவுன்சிந்தை
வெறுத்துக்கவலைகொள்ளவேண்டா முறுக்கித். (கஎகரு)

துயர்ந்தயெதிரிதனைத்தோற்கடித்துன்பகூம்
ஜெயந்தந்தேனென்றுகரந்தீட்டி நயந்திடவென். (கஎகசு)

கைமேலடித்துன்கருத்துநிறைவேறியபின்
னையப்படாமலெந்தனாலயத்தில் மெய்யாய்நீ. (கஎகஎ)

சொல்லியசொற்போலுந்துலங்கியபூங்கப்பரையாம்
நல்லபெரும்பூசைநடத்துவையென் றெல்லவர்க்கும். (கஎகஅ)

நின்றுபரிபூரணமாய்நேர்ந்தபலகேள்விசொல்லி
யன்றுமலையேறியமர்ந்ததே நன்றொடறங். (கஎகக)

காதுகலிகாலமிதிற்கண்கண்டதெய்வமிதைக்
கோதுகுறைசொன்னார்குடிகெடுமிம ஓதிலெங்கள். (கஎஉ0)

தெய்வத்தைப்போலுமொருதேவுண்டோவாய்திறந்தாற்
கைமேற்பலிக்குமெந்தக்காரியமும் உய்தலினிப். (கஎஉக)

பெற்றேன்பயமொழிந்தேன்பேச்சுப்போலுந்தமக்குச்
சொற்றவறுவண்ணந்தொகைகொடுப்பேன் முற்றறிந்து. (கஎஉஉ)

பாருமெனச்சொல்லியவப்பாசாங்குப்பேச்சைநம்பி
சேர்பட்டாரிந்தநிருமூடர் கோருமிரு. (கஎஉங)

சாக்ஷிகளிலொருவன் கூடாதெனல்.

சாக்ஷிகளிலேயொருவன்தந்திப்பானீதில்நமக்
கேச்சவருமன்றிநலமெய்தாதே விச்சனபொய்ச். (கஎஉச)

சாக்ஷியுரைத்தோரும்லஞ்சந்தான்வாங்கினோருமந்த
மாச்செயிலிலாகுமுக்கால்வாசிப்பேர் சீச்சியவன். (கஎஉரு)

ஆயிரந்தந்தாலுமொப்பலாகாதேயொப்பிடில்நம்
லாலிலேமண்விழுந்துமானம்போந் தூயமனு. (கஎஉசு)

நீதியிற்கோரட்டார்நியாயவதிகாரிகளென்
றோதியிந்தலோகமெல்லாமோசையாய்ச் சூதுகொண்டு. (கஎஉஎ)

தப்புப்பிரியாதுபண்ணல்தஸ்தவேசுப்பிரட்டுச்
செப்பருபொய்ச்சாக்ஷிதிருட்டுநடை கைப்படுத்து. (கஎஉஅ)

நம்பிக்கைமோசமனநாணுவிபசாரங்
கும்பிட்டகொள்ளைகொலைமுதலாம் வம்புகளைத். (கஎஉகூ)

தீர்க்கவிசாரித்துத்தெளிவாயவரவர்க்குத்
தாக்குகுற்றங்கண்டுதகுந்தபடி தூக்குடனே. (கஎஙO)

பங்கோற்பயிண்டுபருவிலங்குமாட்டியிரு
செங்கால்தளரச்சிறைப்படுத்தல் பங்கவப. (கஎஙக)

ராதந்தனைவிதித்தல்நாட்டுகின்றவம்பினிலே
வேதனையாய்க்கட்டிமிகவடித்தல் ஈதான. (கஎஙஉ)

தெண்டனைகளெல்லாந்திரணபக்ஷபாதமின்றிக்
கண்டினைகள்செய்புமிந்தக்காலத்தில் கொண்ட. (கஎஙங)

பொருட்காசைபூண்டுநாம்பொய்சொன்னாலென்ன
திருக்காய்லருமோதெரியோர் தருக்கமிடும். (கஎஙச)

நாளைக்கோரட்டினிலேநம்மைப்பிடித்தபொல்லா
வேளையென்னவந்துவிடியுமோ கோளெனவும். (கஎஙஞ)

மறுத்துஞ் சம்மதித்தல்.

விம்மியுடைக்தான்மறுத்துமிக்கபணத்தாசையினால்
மமமரடைந்துமதிகேடாய்ச் சம்மதித்துக். (கஎஙசு)

கோரட்டுவாயற்குறுகியுபயகட்சிக்
காரர்களுமெய்தியங்குகாத்திருக்கப் பார்புரக்கும். (கஎஙஎ)

கோர்ட்டார் தீர்மானம்.

வல்லகோரட்டார்மனுவுபயவாதிகள்தன்
சொல்லுரையும்பத்திரத்தின்சூழ்ச்சியையும் நல்குபல. (கஎஙஅ)

சாக்ஷிகளின்வாய்மொழியுஞ்சாராமிகைக்களெல்லாம்
வூர்ச்சிதமாயாலோசித்துண்மைதனை மாட்சிமையோ. (கஎஙக)

டாய்ந்துவா திக்கேயனுகூலத்தீர்ப்புரைத்து
மாந்துமெதிர்வாதிகுற்றமன்னித்தே யேந்துமர. (கஎசஅ)

சாட்சியர்முன்னச்சமின்றியப்பிரமாணம்புகன்ற
சாட்சிகளாம்ரெண்டுதடியருக்கும் மாய்ச்சலுறக். (கஎசக)

கோரவிலங்கிட்டுக்கொழுத்ததலைமண்சுமக்கத்
தீர்மானமேழ்வருடஞ்செய்தனரே நேரிலிதைக். (கஎசஉ)

தெண்டனைபெற்ற சாக்ஷிகள் வருந்தல்.

கேட்டவுடனன்னோர்கெடியாவிடியடர்த்து
விட்டதருவெனவும்வீழ்ந்தலறி மீட்டுமொரு. (கஎசங)

வர்க்கொருவர்தன்கழுத்தைவாவிப்பிடித்தினைய
சொற்கள்பலபன்னித்துடித்தழுவார் தற்குணத்தால். (கஎசச)

முன்னாலேகெட்டவர்கள்மூவரென்றுசொல்வர்கள்நாம்
தன்னாலேகெட்டோஞ்சதைக்கொழுப்பால் நன்மனையாள் (கஎசரு)

போகாதேபோகாதேபொல்லாதஜட்சியென்று
சாகுருவிபோலுந்தடுத்தாளே ஆகெடுவான். (கஎசசு)

மல்லாரிபெற்றமகன்மாய்த்துக்குள்ளாகி
யெல்லாநலமுமிழந்தோமே செல்லமகன். (கஎசஎ)

நம்பிதுரைச்சாமிதன்மேற்சாமிவந்துதாம்பயலை
மொய்ம்புறக்கோபித்துமுறுகினதாம் பின்புமுனக். (கஎசஅ)

கேஜெயமுண்டாக்குவனென்றேற்கவலக்கைகொடுத்துப்
பூஜையப்பாற்போடென்றும்போயினதாம் தோசியவன். (கஎசகூ)

எத்தனையோதந்திரமாயேமாத்திரம்மிருவர்
புத்திமயக்கமுறப்போதித்தே யெத்திமெல்லக். (கஎரு0)

கொண்டுவந்துமாட்டிக்குடியைக்கெடுத்துநம்மைத்
தெண்டனைக்காளாகவிட்டான்சிற்றப்பா பண்டைநல. (கஎருக)

மெண்ணுமடையனுனக்கேதேனுந்தந்தானோ
கண்ணுனைகானறியேன்கால்க்காசு மண்ணுவான். (கஎருஉ)

வாயாலேயேய்த்துவகைமடிப்புச்செய்துவெறி
காயாயலைந்துகலியவிட்டான் ஓயாமல். (கஎருங)

நாடியிவன்சொல்மொழியைநம்பாதேநம்புவதிற்
கேடுவருமென்றேனீகேட்டிலையே நீடுமக்கோர். (களரிச)

தாழ்வுவரிலாஸ்திமுற்றுஞ்சாதிப்பேனென்றுரைத்த
பாழுறுவானெங்கோபறந்துவிட்டான் வாழ்வுகந்து. (களரிரு)

மேலில்லையிற்பட்டறியோம்வேலையொன்றுஞ்செய்தறியோம்
ஏல்வைநலத்தோடிருந்தோமென்செய்வோம் காலில்விலங் ()

கிட்டொருவன்வன்ஜெயிலிலேவுபலகஷ்டமுற்றும்
பட்டுவந்தோன்சொன்னான்படிப்படியாய்க் கட்டைவெட்டச் ()

சொல்வாராஞ்சாடிமுக்கச்சொல்வாராஞ்செக்கிழுக்கச்
சொல்வாராமண்சுமக்கச்சொல்வாராம் பல்வேலை. (களரிஅ)

செய்துமுடித்துஞ்சிறிதுசெய்யமுடியாதுவிடில்
வைதுவெய்யிற்போட்டுவதக்குவராம் ஐயையோ. (களரிகூ)

காலாலுதைப்பாராங்கையாலிடிப்பாராம்
கோலால்நற்பூசைகொடுப்பாராம் ஓலிடவெங். (களகூ0)

காவல்வசப்பட்டுக்கழிவதினுமச்செயிலின்
சேவகர்நிர்ப்பந்தமோசெப்பரிதாம் தூவன்னம். (களகூக)

கிஞ்சித்துங்கிட்டாதாங்கேப்பைச்சுடுகளியாம்
பஞ்சொத்தகாற்கிரட்டைப்பாடகமாம் அஞ்சுற்ற. (களகூஉ)

இன்னவிதமாஞ்ஜெயிலேழ்வருடமுத்தரித்தங்
கென்னவிதமாகவுமீடேறுவோம் அன்னமய. (களகூங)

வுணிழந்துபேணுமுடலிழந்துநெஞ்சநிறை
பேணிழந்துகீர்த்தியிழந்தாலும் நாணிழந்து. (களகூச)

தன்னீர்க்கலசமொன்றுதாங்கியுயிர்கொண்டுலவல்
நன்னீர்மைக்கூவறோநடைப்பிணமே முன்னோற்று. (களகூரு)

தென்னபவஞ்செய்தனமோயேழ்வருடமுந்தொலைந்த
பின்னலவோபெண்சாதிபிள்ளைமுகம் தன்னைநாம். (களகூசு)

காணுவமோவல்லகடவுள்செயலைப்படியோ
நீணிலத்திலாயுளென்னநிச்சயமா வீணன்முழுப். (களகூஎ)

பாவியிலுஞ்சண்டாளப்பாவிநமக்கெங்கிருந்தான்
தாவியட்டமத்துச்சனிபோலே தேவியுடன். (களகூஅ)

பக்களுநின்றேங்கிமயங்குவரோநம்பகைவர்
கெக்கலிகோட்டிப்புரிவர்கேளிக்கை யக்கோவென் (கஎசுசு)

றையெடுஞ்சிக்கையராயாண்டுவிலங்கிட்டவர்கள்
தெய்வமதைநொந்துசெயலழிந்தார் பொய்யனெனும். (கஎஎ0)

பிரதிவாதிஊர்க்குச்செல்று சொத்துகளை மறைத்தல்.

அப்பிரதிவாதியயர்ந்துநான்தெண்டனைக்குத்
தப்பினதேமுன்னோர்கள்தர்மமென்றும் வெப்புறவே. (கஎஎக)

சாறிவரும்போதுகண்டோர்தான்வினவுங்காலையிவன்
பாறுறவோர்போக்காய்வழுத்துவான் தேறவக்கீல். (கஎஎஉ)

சாக்ஷிகளுக்கெவ்வளவோசாதனையைப்பற்பலகால்
கூச்சமறச்சொல்லிக்கொடுத்திருந்தும் பேச்சைமறந் (கஎஎங)

தீரங்கிக்காலத்திலெக்கசக்கமாயுளறிப்
பாரெக்குந்தூற்றப் பியடைந்தார் பேர்மங்கிக். (கஎஎச)

கொட்டாரெனையுங்கொடுத்தார்கடுஞ்சுழலிற்
பட்டாழ்கலம்போற் பயனிழந்தேன் கெட்டியாய். (கஎஎரு)

ஆனைவால்பற்றினவராறுகடந்துய்வர்சிறு
பூனைவால்பற்றினவர்போலானேன் ஆனாலும். (கஎஎசு)

கோரட்டார்செய்ககொடுமைகொடுமைதிரி
யூரட்டார்செய்கைவலியூழென்றுங் கோரட்டார். (கஎஎஎ)

மீதிலதிகோபமாய்வேகமுடனூர்புகுந்து
மூதியதன்சொத்துமுழுவதையும் பேதமிலா. (கஎஎஅ)

மற்றவிடத்தேபதுக்கிவாதியினிமேலிதனைப்
பற்றிமுடிந்தமட்டும்பார்க்கட்டுஞ் சற்றுங். (கஎஎகூ)

திவலைவிடமாட்டேன்திரிந்துபடிகட்டிக்
கவலையும்றுவீழ்வான்கயவன் அவலமுற்ற. (கஎஅ0)

மப்பினிலோர்வேலையந்தவாரண்டிற்சிக்கிவிட்டாற்
றப்பிவெளியேறுதற்குந்தந்திரமுண் டிப்படிவாய்ச் (கஎஅக)

சட்டதிட்டங்காட்டிச்சமர்த்தாகப்பேசினும்வெண்
சட்டைகண்டாற்கால்கள்தரியாதே கஷ்டமுற்ற. (கஎஅஉ)

வாதியின்சங்கதி.

வாதிகளிகூர்ந்துவலியஜெயம்பெற்றேமென்
றேதரியவேமாப்புடையனாய் ஆதியெனும். (கஎஅஊ)

மீனாக்ஷிசுந்தரற்குமிக்கவபிஷேகமுதற்
றானாக்ஷியாகச்சமர்ப்பித்தே யானால்நான். (கஎஅஎ)

நன்மையேசெய்திருக்கநாடுமெதிர்வாதியெனைத்
தின்னமயுறப்பேசிமெத்தச்சீறினான் அன்னவனை. (கஎஅஏ)

ஊரார்சிரிக்கவொருநாளைக்கானாலும்
பாராச்செயிலில்வைத்துப்பார்ப்பேனான் பாருமென. (கஎஅஐ)

வாதிவாரண்டெழுப்பல்.

நட்டணைகள்பேசிநயந்துபிடிவாரண்டுக்
கட்டளைக்காகப்படியுங்கட்டியே சட்டெனவே (கஎஅஒ)

வாரண்டுச்சேவகனைவல்லையுறக்கூட்டிவந்தே
யூரண்டிவைத்தங்குசாவியே நேரலனோர். (கஎஅஓ)

தாவளத்திற்பந்தகமாய்த்தங்குதல்துப்பாலுமறிக்
தாவலித்துக்கண்டுபிடித்தக்கணமே சேவகன்பாற். (கஎஅஔ)

காட்டியவனேகவிவன்காலயெமபாசமெனத்
தீட்டியவாரண்டைச்செலுத்தவே யாட்டமுற்று. (கஎகூ0)

வாரண்டிலகப்பட்டபிரதிவாதி சேவகனை உறவுகொண்டாட்டல்.

வந்தீரோ அண்ணாவளர்குழந்தைகுட்டிகளுஞ்
சிந்தனையில்லாதெலருஞ்க்ஷேமமா முந்திநா. (கஎகூக)

வண்டியகோரட்டிலனேகந்தடவையும்மைக்
கண்டிருப்பேன்பேசிக்கலந்திலேன் பண்டுங்கள். (கஎகூஉ)

கீர்த்திநெடுநாளளவுங்கேட்டிருப்பேன்தங்களைநான்
பார்த்துவரவென்றாற்பலசோலி யார்த்த. (கஎகூஊ)

சிரஸ்தேதார்மற்றுமுள்ளசேவகருத்தியோகர்
பரிக்ஷையுண்டெல்லாரும்பழக்கஞ் சிரஸ்ததார். (களகூச)

என்பாற்பிரியமலரேதோவிசேடமென
வன்பாற்கடிதமனுப்பினர் நன்பாலா. (களகூரு)

நெய்தயிர்பால்காய்கறிகணேர்ந்தபழவர்க்கமிரும்
பைதவழ்தேனின்னம்பலசாமா னெய்துமதைச். (களகூசு)

சேகரித்துநாளெநின்றுசெவ்வாய்க்கிழமையங்கு
மோகரித்துநான்வருவேன்முந்திநீ யேகுவையென். (களகூஎ)

ரூதரவுஞ்செய்தங்கனுப்பினேனீருமந்தக்
காதர்கான்றன்னையெதிர்கண்டிருப்பீ ரீதுநிற்கத். (களகூஅ)

தூண்டுமிந்தவாதிக்கோர்துட்டளவில்யான்கொடுக்க
வேண்டியதேயில்லைவெகுமோசம் மூண்டவெனக். (களகூகூ)

காகாவிரோதிகளுமக்ரமவாதிப்பயலும்
வாகாகச்சேர்ந்துமறைவுதலா யூகித்துக். (கஅ00)

கற்பனையதாயோர்கடன்பத்திரமமைத்துச்
சற்பனைவிரோதிகளேசாக்ஷிபாய்ச் சொற்பயிற்றி. (கஅ0க)

மட்டிவழக்கிட்டான்மறுதலிக்குங்கேள்விகட்குத்
தட்டியெதிர்சொல்லத்தரமுண்டோ சட்டமுள்ள. (கஅ0உ)

கோரட்டில்நேரேகுறித்திடும்விசாரணையிற்
சீரிட்டென்பக்ஷஞ்செயமிருக்கப் பாரிஷ்ட (கஅ0ங)

ரோதியநியாயமுணராதஜட்சியசல்
வாதிபக்ஷந்தீர்ப்பைவழுத்தினு னீதைநா. (கஅ0ச)

னப்பிலில்மாற்றயடிப்பேனதாற்பெரிய
தப்பிதமனேகருக்குஞ்சள்ளையுண்டென் றப்புறமும். (கஅ0ரு)

நன்றிசெய்தலாலேநமக்கோர்குறைவும்வரா
தென்றெண்ணிப்பேசாதிருந்துவிட்டேன் பொன்றுகையை. ()

யாயிரத்தோடிள்ளமுமையாயிரமானுலுமற்றப்
பேயரைப்போற்சற்றுமனம்பேதியேன் ஞாயமின்றித். (கஅ0எ)

தொந்தமுள்ளதீர்ப்புத்துகையைச்செலவுடனே
சந்தேகநீக்கச்சரிக்கட்டி. முந்தாநாட். (கஅ0அ)

செம்மடையன்றன்பாற்செலுத்திவரும்படியாய்
நம்முடையகாரியஸ்தர்நாகுவையர் தம்மிடையே. (கஅ0கூ)

கையுரக்கமாகக்கடுகியஜவாரியுடன்
பையுரக்கட்டிப்பணமனுப்ப வையரந்த. (கஅகக0)

வாதிபாற்சொர்றுமக்குவாஸ்தவமாயுள்ளதுகைக்
கேதுமறுபேச்சுக்கிடமில்லை யீதுடன்கோ (கஅகக)

ரட்டுச்செலவிலரைவாசியல்லதும
திஷ்டம்போற்றுள்ளியினைக்கமாய்க் கட்டுமிதை. (கஅகஉ)

வாங்குவீரென்றுவெருவாய்வயந்துசொன்னாரா
மாங்கவனெப்பாதாலடமீறி யீங்கு (கஅகங)

மறுபடியுங்கொண்டுவந்தார்வந்ததுகைனயக்
கறுவிமுகர்ப்போட்டுவிக்கட்டி யுறுதியுடன். (கஅகச)

கோரட்டுல்லாமோக்குசாலாபத்தொகைசெலுத்திச
சிரிட்டுவாரதெல்லுமெத்தெத் சாரட்டு. (கஅகரு)

வண்டியுந்தயார்ப்படுத்தினைவத்திருக்குங்காலையுமைக்
கண்டேனிதுக்கவிர்தேர் பண்டெரி. (கஅகரு)

மாதவத்தாலுமைவரப்பெற்றேனுமிருவர்
பேதமில்லைநீரென்றிறவியே பூதலத்தில் (கஅகஎ)

நல்லார்சிநேகமதைநாடினேனல்லதிலை
நில்லாப்பொருள்தாமிலைவரமோ நல்லோரே. (கஅகஅ)

வாரண்டுச்சேவகனைபிரதிவாதி வீட்டுக்கழைத்து வருதல்.

வாசனைசேரென்மனையில்வந்திருக்தக்கோர்வேளை
போஜனஞ்செய்தப்பாற்புறப்படுவோம் யோசனையேன். (கஅககூ)

வாருமண்ணுவென்றுபலவார்த்தைகளைப்பேசவிந்தக்
கூருகெட்டவேளவாய்க்கூதறையன் நேருடனே. (கஅஉ0)

மெய்ப்படுசொல்லென்றுநம்பிவேகமுடனெழுந்தான்
கைப்பசேந்தோஷங்கவடுகெண்டே பொய்ப்புருகன். (கஅஉக)

மனைவியிடத்திற்சொல்லுதல்.

நண்ணுமனையினிற்போய்நாயகியைக்கூவியென்ற
னண்ணுத்தைவந்தாரறியாயா நண்ணு. (கஅஉஉ)

விருந்ததடிபாவாயிவர்நமக்குமெத்தப்
பரிந்திடுசிநேகசம்பந்தம் வருந்திநீ. (கஅஉங)

யாரென்றிராதேயிவருளக்குமச்சானும்
பூருவத்திற்செய்திருந்தபுண்ணியமே யோருருவாய். (கஅஉச)

வந்தாரிவற்குவரிசையுபசாரமிட்டு
விந்தையுடன்பேசாவிருந்திடுவோஞ் சந்ததமும். (கஅஉரு)

நம்மனையிலேபசுக்கள்நானழியோகறக்கும்
அம்மணத்தானல்விருந்துக்கஞ்சுவனோ கம்மலிலே. (கஅஉசு)

நித்தியமுந்தப்பாமனீகடைந்தவெண்ணெய்தனைப்
புத்துருக்குநெய்போற்புனிதமாய் வைத்துமலர்த். (கஅஉஎ)

தாதுலவுஞ்சாடிகளிற்றானிருக்குமேயதனைப்
பூதிச்செலவுபண்ணிப்போடாதே போதுமென்ற. (கஅஉஅ)

பலகாரவர்க்கம் கூறுதல்.

பச்சரிசிமுக்குறுணிபற்றுதுபற்றலையென்
றச்சமயமுக்காலமூகாதே பச்சரிசி. (கஅஉகூ)

பின்னம்பதக்கிட்டாலேராளம்நீயென்ன
சின்னஞ்சிறிசோதெரியாதா பின்னுங்கேள் (கஅஙo)

பச்சைக்கடலைபசும்பயறுகோதும்பை
மொச்சையுளுந்துமுளைத்துவரை யிச்சையொடு. (கஅஙக)

பந்திநிறைசாரப்பருப்புவாதாம்பருப்பு
வந்தனவிதெல்லாம்வகைவகையா யந்திரத்தில். (கஅஙஉ)

மாவரைத்துத்தெள்ளிமதுரம்புகட்டியதை
நீவளமாய்ச்சேர்ப்பாய்நிமிடத்தில் நாவினிய. (கஅஙங)

சினிச்சருக்கரையுந்தேனுங்குடங்குடமாய்ப்
நானிச்சணமழைத்துநல்குவேன் மானேதண். (கஅஙச)

பூமலிவெண்பூந்திபொலிவுறுசிலேப்பிலட்டு
மாமதுரமிக்கமதுர்பேணி சோமாசா. (கஅஙரு)

பாதுமல்வாகெய்யுருண்டைபாலடைரவாலாடு
தாதுவிர்த்திசெய்திடுகுஞ்சாலாடு மோதுநொக்கல். (கஅஙசு)

பால்கோவாசேவுபணியாரந்தோசைமன
மால்மேவுபோளிவடைசுகியம் நால்விதமாம். (கஅஙஎ)

அப்பளந்தேம்பாகோடதிரசஞ்சீராபருப்பி
முப்பழஞ்சேர்லவாமுகலாக விப்புவியி. (கஅஙஅ)

லென்னபலகாரமுண்டோயாவுமன்கைப்பக்குவத்தால்
நன்னயமாய்முந்திநடக்கட்டும் மன்னுசுவை. (கஅஙஃ)

விருந்துவளப்பம் கூறுதல்

காட்டுவிருந்தினுக்குக்காய்கறிசாமான்கள்பல
தேட்டமறக்கொண்டுவந்துசேர்க்கிறேன் நீட்டுசிறு. (கஅசஃ)

சன்னச்சம்பாவரிசிச்சாதத்தைப்போதமுல்லை
மன்னுமலர்போலாய்மலர்த்தியே யின்சுவையிற் (கஅசக)

கூட்டுக்கறிகள்குழைகறிகள்செய்துவட்டல்
பாட்டிசமேர்பச்சடிபொற்பாளிதங்கள் வேட்டருந்து. (கஅசஉ)

மோர்க்குழம்பைச்சற்றுமுதிரவிடாமலுந்தீம்
பாற்குழம்பைமெத்தப்பசுந்துசெய்வா யேற்கும். (கஅசங)

பருப்பிரசமுன்கையினற்பக்குவமானாலோ
கருப்பிரசம்போலினிக்குங்கண்டாய் விருப்புபெருங். (கஅசச)

காயமதைக்கொஞ்சங்கனமாகச்சேர்த்திடுவை
வாயுவைக்கண்டிக்குமலநகர்த்தும் ஆய. (கஅசரு)

கறிவகையில்மிச்சங்கடுகையிடாயத்தா
லிறுகுமலங்காங்கையெழுமே நறியசெழும். (கஅசசு)

பாயசத்துக்காகப்பழுதறுகோதும்பைபரல்வை
யாயதிற்றீம்பாலையளந்துவிட்டுத் தூயபன்னீர். (கஅசஎ)

சுக்குச்சாதிக்காய்துடிசேர்[illegible]
[illegible]ரசம்வாதாம்பருப்[illegible] மொக்கலஞ். (கஅசஅ)

சேருங்கற்கண்டொடுநற்சினியுமொன்றாய்க்கலந்து
சாரந்தெளிவுபடத்தாளித்து மாரஞ். (கஅசகூ)

சிதமுறவும்பக்குவமாய்ச்செய்தாலண்ணவுக்
கதுபிரியமாயிருக்குமன்றோ புதுமலரிற். (கஅரு0)

றேமதுரம்போலுந்திரட்டுப்பால்பண்ணுவதை
நீமறந்திடாதேநினைவில்வைப்பா யாமிதிற்றப். (கஅருக)

விருந்து வளப்பம்

பாதுபலகாரவர்க்கம்பாதிசெலவாகமற்றப்
பாதியைச்சூதானப்படுத்துவாய் ஓதுமிவர். (கஅருஉ)

கூடவேசென்றந்தக்கோர்ட்டிற்றுகைசெலுத்தி
மாடிதிகழண்ணுமனைபுகுந்து நாடியண்ண. (கஅருங)

தேவியார்மற்றும்வளர்செல்வரையும்பார்த்தவர்க்கு
நாவினியபட்சணமுநல்கியே மாவிலையி. (கஅருச)

லண்ணியர்க்கோர்பட்டுமருமைக்குழந்தைகட்கு
வண்ணச்சிற்றுடைவழங்குவே ணண்ணவுக். (கஅருரு)

கூதாப்பெரியசரிகையுருமால்கொடுப்பே
னீதெனக்கோர்லெட்சயந்தானில்லையே மீதி. (கஅருசு)

யிறுப்புத்துகையிலிவர்க்கியன்றமட்டுங்
குறிப்பறிந்துபின்னுங்கொடுப்பேன் மறுத்துநீ. (கஅருஎ)

வேண்டாமென்றோதிவெகுவாய்த்தடுத்தாலும்
நீண்டகைகொடாதினிமேனிற்குமோ வீண்டுலகி. (கஅருஅ)

லில்வயதுக்குள்ளாய்நானெவ்வளவோதேடியபொன்
னவ்வளவுமேவிறையமாக்கினேன் மெய்வருந்து. (கஅருகூ)

தீனர்களுக்கியோமற்றேமம்பொருளவர்பின்
போனதணுவுண்டோபுகலுங்காற் றுனகுணம். (கஅசூ0)

மன்னியதோர்மூவேழுவள்ளலெனக்கீர்த்திபெற்று
ரன்னவர்களீகையினுலல்லவோ வென்னண்ணு.(கஅசூக)

வெந்தாகமீறவந்தோவெய்யிலிடைந்து
வந்தார்பசிபொறுக்கமாட்டிலா ரெந்தோகா. (கஅசூஉ).

யற்றத்தரித்திரமென்னப்பளத்தைவாட்டியிந்த
வற்றலேநேன்றாய்வதக்கியே பற்றித். (கஅசுங)

தொழவுரியமாற்றுத்துவையலிட்டோர்குத்துப்
பழையதுவைப்பாய்முன்பசிக்குக் குழைவுறவே. (கஅசுச)

வாய்க்குருசியாய்வளமாய்க்கறிவகையுஞ்
சீக்கிரமாகட்டுஞ்செழுஞ்சமைய லாக்கர்கடை. (கஅசுரு)

மாடுலவுஷாப்பிற்சாமான்கொஞ்சம்வேண்டுமதை
யோடியிதோவாங்கியொருமினிட்டில் நாடிமிக. (கஅசுசு)

பிரிதிவாதிவாரண்டுசேவகனுக்குத் தப்பியோடுதல்.

வாரேன்வாரேனெனவும்வாரண்டுச்சேவகனைக்
காரியம்போலெத்திக்கடும்புளுகன் பாரி. (கஅசுஎ)

யளப்பிதுவேயாமென்றதுபோக்காயோடி
யொளித்திடவச்சேவகனுமுள்ளங் களித்து. (கஅசுஅ)

வருவான்வருவானென்றெண்ணிவழிபார்த்து
மொருநாளுங்காணுணுணங்கி மருவிநம்மை. (கஅசுகூ)

சேவகன்மனம்வருந்தல்.

மோசமேசெய்தவிலேர்மோசமிலையேமிகப்பே
ராசையெனக்கூட்டியலைத்தித் தோசியிவ. (கஅசுஎ0)

னெத்தனையோவார்த்தையிதமாயுரைத்தமொழி
யத்தனையுமெய்யென்றேயாணிருந்தே னித்தரமாய். (கஅஎக)

வஞ்சிப்பானென்றுகிஞ்சமாத்ரமறிந்தாலிவனை
மிஞ்சிப்பறக்கவிடுவேனோ கொஞ்சியுல. (கஅஎஉ)

கேத்துகொடையாளியைப்போலென்னென்னமோபயல்தான்
பூத்தானங்காட்டிப்புளுகினனே தூத்தேரி. (கஅஎங)

நல்லவிருந்தாம்விட்டில்நாளுழிப்பாலுளதாம்
அல்லவுகெய்ச்சாடியளாவிலையாம் வெல்லமிட்ட. (கஅஎச)

கூட்டுக்கறியாங்குழைகறியாம்வக்காளைப்
பேட்டுக்கிடந்தபுளிக்கறியா மூட்டுகின்ற (கஅஎரு)

பச்சடியாம்நெய்யாம்பருப்பாமதிரசமாங்
கிச்சடியாம்வைச்சடிச்சுக்கிண்ணுவனும் பட்சணமாம் (கஅஎகூ)

நற்றிரட்டுப்பாலாமென்னுயகிக்குப்பட்டுடையா
முற்றவெனக்கோருருமாலாஞ் சொற்றகொடைக். (கஅஎஎ)

கன்னுவதாரக்கடும்புலியாய்யாவர்தடை
சொன்னுலும்வாரிச்சொரிவானும் இன்னபல (கஅஎஅ)

வார்த்தைகளாலேமாத்திமாயமாய்த்தப்பியசங்
காத்திமகன்போனவழிகாணேனே யாத்தாடி. (கஅஎகூ)

யாடெடுத்தகள்ளனுக்கிங்காக்கியிட்டகள்ளியிவட்
கிடொருவருண்டோவென்றிவ்விதமாய் வாடியவ. (கஅஅ0)

னுங்காங்குபார்ப்பானயர்த்துமனங்குழைவா
னேங்காமலேங்கியெழுந்திருப்பா னீங்கிவனும் (கஅஅக)

ஆஜரில்லையென்றுசொல்லியத்தாட்சிவாங்கவென்ரு
லோசரியாய்வாதியவனுப்பானே நீசகன்செய் (கஅஅஉ)

மோசமதையுள்ளபடிமுற்றுமொழிந்தாலுமந்த
நாஸரெந்தன்சொல்மொழியைநம்பானே பேசியநா. (கஅஅங)

ளோரெட்டிற்சேவகன்பாலொப்பித்தேனென்றுசொல்லிக்
கோரட்டில்வாதிமனுக்கோருவனே நேரிட்ட. (கஅஅச)

குற்றமதைக்கண்டுணர்ந்துகோரட்டார்சேவகத்தைப்
பற்றறவுநீக்கிவிடப்பார்ப்பாரே நற்றயவா. (கஅஅரு)

யாதியிலென்பாட்டனதன்பேரிலென்தகப்பன்
பாதுகொண்டுயானும்பரம்பரையாய் மேதையுடன். (கஅஅகூ)

சாலவெண்பத்தேழ்வருடச்சார்வீசேயாகுமிந்த
வேலையிழந்துவிடுவேனே தோலாண்டி. (கஅஅஎ)

வேடம்பூண்டானுலும்வெய்யனைநான்கண்டுபிடித்
தேடைரிபோட்டவனைத்தெண்டிக்கக் கோடறிய (கஅஅஅ)

நாடிவருவேனெனவுநாளுமிவன்போற்சிலருந்
தேடியலந்தோடித்தியங்கினரால் நீடுகடற். (கஅஅகூ)

பேரண்டந்தன்னில்வெகுபேர்கள்பயங்கொண்டுபொல்லா
வாரண்டெவ்வேளைவருமோவென் நீரற். (கஅகூ0)

கருகியதுவேநினைவாய்க்கண்கலங்கிநாளு
மருவுகின்றபோழ்துவழிமே லொருவனங்கு. (கஅகூக)

தாவுசட்டைபூண்டவனுய்த்தன்போக்காய்ப்பாதைவரச்
சேவகனேவென்றுதிகிற்பிடித்து நாவிதனும். (கஅகூஉ)

பாதித்தலைசிரைத்தும்பாதிசிரையாதிருக்கும்
போதுபறிபட்டுப்புளக்கடையாய் மோதுபெரும். (கஅகூங.)

காகெளிலேபகுந்துங்காணுமலைப்புடம்பும்
தேடியொளிவார்சிலபேர்கள் நீடுலகி. (கஅகூச)

மற்றும்பிரதிவாதிகள்வாதியைக்கண்டு கேலிபண்ணுதல்.

லார்ப்பரித்துநாளுமரசுபுரிகோரட்டார்
தீர்ப்புரைத்தபின்னுஞ்செலுத்தாமல் சூர்ப்புறத்தன். (கஅகூரு)

மாவளஞ்சேராஸ்தியெல்லாமற்றவர்க்குவிற்றுவிட்ட
பாவனேபோற்பத்திரமுற்பத்திபண்ணிக் கூவிக். (கஅகூசு)

கருதுமசல்வாதிதனைக்கண்டவுடனேங்கிச்
செருமிகின்றுமீசைதிருத்தி மருவுஜெயிம். (கஅகூஎ)

கெல்லாரைப்போலுமினியபடிகட்டவிதி
யில்லாப்பயற்கேனிறுமாப்புத் தொல்லைமுடை. (கஅகூஅ)

நாறுஞ்செயில்தனையுநானறிவேனென்றுசொல்லிச்
சீறித்திரிவார்சிலபேர்கள் மீறுகின்ற. (கஅகூகூ)

முதலாளிகள் ஒப்பந்தம்செய்தல்.

வாணிபர்கள்கைப்பணத்தைவட்டிக்காயிச்சைகொண்டு
நாணயமிலாதவர்க்குநல்கியே வீணிற். (ககூ0ஃ)

றெருத்தெருக்கடோறுந்திரிந்தலைந்துசிந்தை
வருத்தமிகக்கொண்டுமறுகால் ஒருத்தருக்குஞ் (ககூ0க)

செப்புக்காசேனுஞ்செலவிடல்கூடாதெனவே
யொப்பந்தம்பேசியொழித்துவிட்டா ரிப்பரிசால். (ககூ0உ)

வானிடுவிற்போன்றறுதல்மானேவெறுங்கைமுழுக்
தானிடுவதுண்டோநீசாற்றுவா யாறுலும். (கசூ௨௩)

நன்கார்ந்தபண்டிகையைநாமுஞ்செய்வாமெனச்சீ
வன்போலும்பூண்டிருந்தமங்கலத்தை முன்போலும். (கசூ௨௪)

கொண்டோடிவிற்றுக்குலாவியதீபாவளியை
யுண்டாடல்காட்டியொழித்தனரே மண்டலத்தோர். (கசூ௨௫)

இவ்விதமாய்ப்பஞ்சத்திடர்மருவுகாலையினிற்
றெய்வபலத்காலுமிதைத்தீர்ப்பமெனச் செல்வியல்சேர். (கசூ௨௬)

மஹாநாட்டார்பஞ்சநிவர்த்திசெய்யச் சங்கங்கூடுகல்.

நானுகுலத்துதித்தநாட்டுத்தலைவர்களும்
மானுபிமானமுள்ளமாந்தர்களும் ஞானவளம். (கசூ௨௭)

பொங்குமதுரைப்புதுமண்டபத்தில்மகா
சங்கமெனச்சேர்ந்துசபைகூடி யிங்குநாம். (கசூ௨௮)

ஆண்டவனிலாதவடிமையோநம்மைவழி
பூண்டகுலதெய்வமென்னபொய்த்ததோ யீண்டியநங். (கசூ௨௯)

கைக்குள்வெண்ணெய்க்கட்டிகனமாகவைத்திருந்தும்
நெய்க்கலைவார்போலுநினைவயர்ந்தோம் பொய்க்கலியாற் (கசூ௩௦)

சங்கரனுமய்யமெடுத்துண்டான்றடங்கடலின்
மங்கையுடன்காறைந்தான்மாலென்றுஞ் சங்கமதில். (கசூ௩௧)

அவ்வைசொன்னநீதியறியோமோநாமினிமேற்
றெய்வசன்னிதானமதிற்செப்புவோம் பவ்வமெழுஞ். (கசூ௩௨)

சூரியனைக்கண்டபனிதோன்றுதகல்வனபோற்
பாரில்வினையெல்லாம்பறந்துவிடும் வாருமென்று. (கசூ௩௩)

சோமசுந்தரக்கடவுள் சன்னிதானத்தில் நாட்டார்கள்முறையீடு.

பற்றுயத்தொடரும்பவந்தொலைத்துமுத்திதரும்
பொற்றுமரையின்புனலாடி முற்றுரிய. (கசூ௩௪

சத்திசிவமாகிநிறைதற்போதசிற்பரமாஞ்
சித்திவிக்கினேஸ்வரனைத்தெண்டநிட்டு மொய்த்துலவு.(ककककரு)

கங்கைமுகதம்பகவளர்திகழ்மதங்கியுமை
பங்கயமணங்கமழ்பதந்தொழுது பங்கமர். (ककककசு)

சதாசிவசுதாகரசடாதரசபாநட
னிதாகிதமிலாதவனிராசத னதிதிய. (ककककள)

னிராகரனிராமயனிராகிர்தனிராகுல
சராசரபராபரதயாபர னராவணிகொள். (ककउ०अ)

வேதாந்தவேதியனைவேதனுமால்காணரிய
நாதாந்தமோனநவமணியை ஆதார. (ककककசு)

மேவுகருணையனைவீரியப்பரபாகரனை
மூவுலகுந்தானுமுதற்பொருளைத் தேவாதி. (ककउ0)

தேவசகநாயகனைத்தேசோன்மயப்பொருளைப்
பாவனைக்குமெட்டாப்பரஞ்சுடரை யாவிதொறு (ककउक)

மெள்ளுக்குளெண்ணெய்போலெங்குநிறைகின்றவனை
யுள்ளுக்குமுள்ளாயுறைபவனைத் துள்ளிவரு. (ककउउ)

தந்தியதள்பூண்டவனைச்சச்சிதானந்தனைப்பொன்
னந்திவண்ணம்போலொளிருமற்புதனை சுந்தரற்குத். (ककउउ)

தூதுசென்றமாமுதலைச்சூலாயுதக்கரனை
யாதிசருவேச்சுரவனுமயனைச் சோதிதவழ்.(ककउच)

பங்கயக்கண்ணுற்குப்பருதிவட்டந்தந்தானை
அங்கயற்கண்பாகமமர்ந்தானை யெங்கள்சிவ. (ककउछ)

சொக்கேசரென்னுஞ்சுடர்தனைக்கண்டானந்த
நெக்குருகிநெக்குருகிநெக்குருகி யக்கணமே. (ककउअ)

நாட்டாரனைவர்களும்நாடியகண்ணீரரும்பச்
சாஷ்டாங்கதண்டன்சமர்ப்பித்தே நாட்டமுடன். (ककउए)

வானுதிபூதமுதல்மற்றும்பொருளெவையும்
தானுய்நிறைந்ததயாபரனே மேனாளி. (ककउऐ)

லம்புயனுமாலுமுடன்றூற்றுமிகல்மாற்றுதற்குத்
தம்பவழலாகிநின்றதாணுவே நம்புபஞ்ச. (கக்கூஉகூ)

வன்படையாலன்றிறந்தமாயவராகக்குருளைக்
கன்படைந்துபாலருந்துமப்பனே மின்சால். (கக்கூஉ)

உலகந்தனைப்படைத்திரோதரியிவர்
பலவுமினிதாகப்படைத்தீர் உலவுமதற் (கக்கூஉக)

காதரமாய்மண்ணும்விண்ணுமாதாரமாக்கிமலை
வேதமுறுதெல்வுயிரும்ரெகூடித்தீ ரோதுமிந்நாள். (கக்கூஉ.)

அவ்விரண்டையுஞ்சுருக்கிலக்தோவான்மாக்களினி
யெவ்விதமுய்தற்கியலுமென்செய்வோம் செய்வே. (கக்கூஉ.)

பருவகாலத்தில்மழைபார்மீதுபெய்யா
தரியவிளைவில்லாதருவிப் பரவுயிரும். (கக்கூஉச)

வாடுவெதுஞாயமதோமாமறையினுட் பொருளோ
தேடக்கிடையாச்செழுங்குன்றே நீடுகடைக். (கக்கூ.ரு)

கண்பார்த்தடியார்கலக்கந்தவிருமென்று
பண்பாய்த்துதிகள்பலபகர்ந்து நண்பொடெதிர். (கக்கூஉகூ)

நின்றுகெடுநேரநிகழ்த்துமொழிகேட்டையயன்
கன்றுகண்டவாப்போற்கவிந்திரங்கி யொன்றுக்கும். (கக்கூஉஎ)

சோமசுந்தரக்கடவுள் திருவாய்மலர்தல்

அஞ்சாதிருங்கடமையாதரிப்போநீவிரினிக்
கொஞ்சமேனுங்கவலைகொள்ளாதீர் பஞ்சமிங்கு. (கக்கூஉஅ)

நேர்ந்தவிதமெம்மைநினையாதிகழ்ந்ததினும்
காந்திவிளையாடல்சற்றேகாண்பித்தோ மாய்ந்திடுங்கா. (கக்கூஉகூ)

வுள்ளத்துக்குற்றமொருகோடியானாலும்
பிள்ளைக்குந்தாய்க்கும்பிணக்குண்டோ வள்ளலென்று. (கக்கூ0)

நம்மிடம்வந்தன்பானயந்துமொழிந்தீர் களுங்க
டம்மனம்போலேசகலசம்பத்தும் ரம்மியமுடன். (கக்கூக)

நீங்கள்பெற்றுப்பூவுலகினீடுழிவாழ்ந்திருக்கப்
பாங்காயுமக்குவரம்பாலித்தோ மோங்குலகில். (கக்கூஉ)

இன்றுமுதல்வானமிறங்கிவருஷிக்குமிகு
நன்றிகளுண்டாகுமினிநாடோறும் வென்றிபொரு. (கூ௬௪௩)

வேகவதிமுதலாய்:மிக்கநதிதோறும்ப்ர
வாகமலிந்துவளம்பெருகும் நாகுலவு. (கூ௬௪௪)

வாவிதடாகங்களெல்லாம்மல்கும்புனல்சிறந்து
மேவுசெம்பொன்முப்பூவினைவோங்கும் பாவமறம். (கூ௬௪௫)

வஞ்சங்கொண்டோகிமினிவாய்மையுறங்காருண்யங்
கொஞ்சிக்கலந்துகுடியிருக்கும் கஞ்சமலர்ச் (கூ௬௪௬)

செந்திருவும்வீற்றிருப்பள்தேவாலயங்களெல்லாஞ்
சந்தகுமும்பூஜைகளமுத்தேதாங்கு மந்திரிகளுஞ். (கூ௬௪௭)

சேனைராசாங்கமொடுசெங்கோல்தழைத்தோங்கும்
தானதவமெல்லாந்தலையெடுக்கும் கானக். (கூ௬௪௮)

கராசலமாமாதிகளடையெறும்பென்றுதுஞ்
சராசரங்கள்யாவுந்தழைக்கும் நிராகுலமாய். (கூ௬௪௯)

வீரியக்கலைகளெல்லாமிகவார்ப்பரவிலுகன்
மாரிபொழிந்தவுடன்மாகிலத்திற் சிருநவே. (கூ௬௫௦)

யுத்தமக்கீகாரளாழுமெருதுகட்குமுயர்
வித்தைபொருந்துவிலைகவிந்துகட்கும் முந்து. (கூ௬௫௧)

மசகூலிமற்றுநற்குணட்டுடையக்கையிற்
பசையில்லாதிதன்செய்வீர்பாலம் மிசைவாகத். (கூ௬௫௨)

திக்குமுடனிதனைத்தேடிவிவசாயமதை
யேற்கையுடனீவீரியற்றுகிறு மேற்கனவே. (கூ௬௫௩)

முந்தும்பலன்கள்வரமுன்றுதிங்கள்செல்லுமிப்போ
துந்தும்பசித்துயரையோட்டுமோ வந்தோ. (கூ௬௫௪)

சிசுக்கள்முதலாய்த்தியங்கவருத்தும்
பசித்துயர்கேட்டுள்ளம்பரிந்தேன் வசித்துநீ. (கூ௬௫௫)

ராறுதலையுள்ளவனென்றன்பாகவந்தவுமக்
காறுதலையென்சொல்லியாற்றுவேன் கூறியுங்கள். (கூ௬௫௬)

சோமசுந்தரக்கடவுள் தமதுசரித்திரங்கூறுதல்.

தன்பாடுமுற்றுமென்பாற்சாற்றினீருங்களிட
மென்பாடுஞ்சற்றேயியம்புவே னன்கார்ந்து. (கசுஇஎ)

வாழ்வுயர்பொன்வெள்ளிமலையாயிருந்தெனக்குந்
தாழ்குடிலப்பஞ்சந்தலைப்பாரஞ் சூழுமுனி. (கசுஇஅ)

வோர்கள்பன்னியார்நகைக்கவூன்மண்டையோடேந்திப்
பாரிலையமேற்றதுவுஞ்பண்டறிவீர் o பார்வைக்கு (கசுஇகூ)

ாருமதியாதவனு * யங்கமெடுத்தேன்பவத்தை
யீருமடியாருக்கெளியனன் யாருமற்றான். (கசுகூ0)

அன்னைபிதாவில்லாவனுதியிவனென்னுமொழி
கன்னமுறவஞ்சிநெடுங்காடுற்றேன் பின்னுமோர். (கசுகூக)

கம்பத்தில்ரெண்டானைகட்டியதனுலடைந்த
சம்பவங்கள்போதுந்தலைமுறைக்கும் வம்பியரா. (கசுகூஉ)

யுற்றமனையாட்டிகளிலோங்குமிளையாளொருத்தி
யெற்றிமதித்தென்றலையிலேறினுள் மற்றொருத்தி (கசுகூங)

யண்டாதநீலியடங்காப்பிடாரிமணங்
கொண்டேற்குமஞ்சாக்கொடுஞ்சூரி மண்டமரில். (கசுகூச)

விற்காட்டுந்திக்குவிஜயமதிலென்படையைப்
பற்காட்டியோடும்படியடித்தா ளிற்குரிய. (கசுகூரு)

மாதிவளோ ₪ பொல்லாத ... வம்பியினுலன்றோநான்
பாதியுடலானதையும்பாருங்கா ணுதிமுத. (கசுகூசு)

லஞ்சுதலையாகிநின்றேனங்கமெல்லாஞ் * சூடுபட்டேன்
கொஞ்சவிதிபானடுக்கக்கொண்டுநின்றே னஞ்சபையி. (கசுகூஎ)

---

o பார்வைமதி-ஆதவன். * அங்கம்-எலும்பு.

₪ பொல்லாத-பொள்ளாத வம்பி வாசனையுடையவள்.

... சூடு-அக்கினிமயம்.

* நடுக்கம்-நடுத்தலை.

லாட்டிட்டுக்கோட்டிகொண்டாளந்தோவிதையுரைக்கி
ளூட்டிலுள்ளார்பின்னுநகைப்பரே மீட்டுமந்தக். (சகூகூஅ)

கட்டழகிசொல்வார்த்தை 0 கண்டு - பயந்தேனென்று
பட்டம்வைச்சுத்தேவர்பழிச்சார்கள் நட்டணையாய்ப். (ககூகூகூ)

பிட்டுக்குமண்சுமந்தேன்பின்னிடையன்கைவளாளால்
வெட்டுண்டேன்மேனிமிகச்சிவந்தேன் செட்டியெனக். (ககூஎ0)

கோதில்வளைகள்விற்றேன்கொள்ளாவிறகுவிற்றேன்
சாதிகெட்டவேடனெச்சில்தானுண்டேன் மாதுணிவாய்ச். ()

சென்றண்டர்காத்திருந்ததில்லையினிலாடெடுத்தே
னென்றென்னையம்பலத்திலேற்றினா ரன்றொருநாள். (சகூஎஉ)

மாவகத்தைக்கொண்டவஞ்சர்வாழ்புரத்தைநாளெரித்த
சீசலகத்தைக்கேட்டாற்சிரிப்பாகும் பூவில்மறு. (ககூஎங)

போக்கில்லாமென்றுமுழுப்பூச்சாண்டியென்று * மண்டங்
காக்கையென்றும்பொல்லாக் o கசடனென்றும் நோக்கரிய ()

கள்ளன்மழுமாறியென்றும் ‡ கஞ்சாக்குடியனென்றும்
பிள்ளைதின்னிப்பேயனென்றும்பித்தனென்றும் முள்ளடிய. ()

0 ரீனமுள்ளானென்றுமிருகாலுஞ் ● சந்துமிகப்
போனவிவனென்றும் † புழுக்கையென்று மானமட்டு. (ககூஎசு)

மெய்யில்லானென்றுவாடிவேலருட § மாமிதனைக்
கைகலந்தான் * போகிக்கடையனென்றுஞ் செய்யதங்கை. (ককূএএ)

மேலனலைமூட்டிவிட்டவீம்பனென்றுமென்பேர்சொன்
னாலெவர்க்கும் + கேவலமுண்டாமென்றுஞ் நால்முனிவர். ()

0 கண்டு கற்கண்டு - பயம்பால்

* அண்டங்காக்கை உலகங்காக்குங்கடவுள்

o கசடன்கஜத்தைஅடஞ்செய்தவன்

‡ கஞ்சாக்குடியன்-மேலானகுடும்பம்

0 ஈனமுள்ளான் - குற்றம்நினையாதவன்

● சந்து-தூது-புழுக்கை-உஷ்ணமுள்ளவன்

† மெய்யில்லான்-சரீரமில்லான்

§ வேலன்மாமி மான்

* போகிக்கடையன் - நாககங்கணன்

+ கேவலம் மோக்கம்.

பத்தினிமார் கற்பைப்பரிந்தழித்தவம்பனென்றுந்
துத்தியமாய்ப்பேசியலர் தூற்றினர் உத்தமரே. (கசுஎகூ)

கற்பமும்புமீதொருவன்காற்செருப்பினாலுதைத்தான்
முற்பிரம்புகொண்டொருவன்மோதினான் வற்புறுத்திக். (கசுஅ)

கல்லாலொருவன்கடிதெறிந்தான்மற்றொருவன்
வில்லாலுமாட்டிவினாந்திழுத்தான் செல்வரெனப். (கசுஅக)

பற்றிப்புனையும்பணியோபணியிடையிற்
றொற்றித்திரிவதுவுந்தோலாடை யுற்றிடுமிக் (கசுஅஉ)

கேவலந்தினலலவோகேகவலுக்குப்பெண்ணளித்துக்
தாவுகடனஞ்செனக்குந்தந்ததுகாண் மாவளஞ்சேர். (கசுஅங)

இன்னகருளாறொருவனென்பூசனைகுரியார்
தன்னில்மிகுல்லன்றருமியென்றோன் சொன்ன (கசுஅச)

மிடியால்வருந்துமெலிவதனைமாற்றும்
படியான்பொருளாலாத்துப்பாடித் தொடைவருசீர். (கசுஅரு)

கோங்குதேர்வாழ்க்கையெனக்கூறுந்திருமுகமொன்
றங்கவன்பாற்றீட்டியனுப்பினேன் சங்கத்தி. (கசுஅசு)

வீட்டுதிழக்கீரனென்றோமெனக்கவியிலோர்குற்றங்
காட்டிப்பரிசைக்கடத்திவிட்டான் மீட்டிநீர். (கசுஅஎ)

நெற்றிக்கண்காட்டியெனைநீற்றிடனுமிக்கவியிற்
குற்றமேகுற்றமென்றுங்கூறினனை முற்றவுநீ. (கசுஅஅ)

ரென்பிறைப்பைக்கேட்டலெவர்க்குநகைப்பாமிகவும்
புன்பசியால்வந்தீர்புதல்வர்கா ளன்புறனு. (கசுஅகூ)

ணுங்களுக்கேதேனுமுதவிசெய்வோமென்றாலென
செங்கையில்வேலேந்துமுண்டோசெப்புவீர் பொங்கமுறப். ()

பூருவமாயானும்பொருந்திவசித்திடுமோ
ருருண்டவ்வூரதுவுமொற்றியே கார்வளஞ்சேர். (கசுகூக)

பெற்றிகழின்னகரோபெண்வழியிற்சீதனமாத்
தொற்றிவந்ததாலெனக்குச்சொந்தமில்லை நற்றொனிவால். ()

வண்டார்ந்தகையான்வழங்குமொற்றைமாடுண்டு
கண்டீரதற்குமொருகாணுடக்கந் துண்டா. (கசுகூங)

யடகுவத்துக்கொள்வீரென்றுபரணந்தந்தாற்
பெடையுநடுநடுங்கும்பாம்பாங் கடமேவு. (௧௧௬௪)

மும்பல்மெய்த்தீதாலுக்குமுடையாயணிந்திருக்கு
மம்புலித்தோலுக்கும்விலையார்கொடுப்பார் டம்புமுடை. (௧௧௬௫)

யாருசவென்பையளிக்கிலதைக்கண்டவர்கள்
சீசியென்றேசியுமைச்சீறுவார் மாசார்ந்த. (௧௧௬௬)

வக்குமணிபைக்கொடுத்தலார்சீத்துவார்கள்வெறுஞ்
சக்கையெருக்கூமந்தாச்சாரமுண்டோ கைக்குட். (௧௧௬௭)

டருக்குற்றசூலமதைத்தந்தாலோர்தூண்டிக்
கருப்பட்டியீவான்கடையில் லிருக்கின்ற. (௧௧௬௮)

வீடோமயானமந்தவெட்கந்கேடென்னசெயலவே
னோடன்றிக்கையினில்வேறொன்றுமில்லை நாடிக். (௧௧௬௯)

கனமாய்நினைப்பிரென்காரியத்தைநீவிர்
வினவியும்ருல்வெட்டு வெளியா மனையவோ. (௨௦00)

விந்துணுசரித்திரங்கூறுதல்.

ரெந்தகைமையாவுமிசைத்தேனென்மைத்துனனார்
தந்தகைமையிற்சிறிதுசாற்றுவேன் மைந்தனுடன. (௨௦0௧)

காதலுறப்போராடிக்காற்பங்குக்காய்நிலத்தை
வாதிலுழுதானேனவாயனுய் மோதல். (௨00௨)

முதிருங்களத்திலுள்ளார்மொய்த்திருக்கப்போரிற்
கதிரையொளித்துலைத்தகள்ள னதுவுமன்றிப். (௨0௦௩)

பாடியிடைமாதருரிப்பாறயிர்மோர்வெண்ணெயெலா
மோடிநிதங்காணுமலுண்ணுதல்கண் டாடியவர். (௨00௪)

நின்றன்னைதன்பானிகழ்த்தவுரலோடுபற்றிக்
கன்றனையுந்தாம்பாற்கடிதுகட்டி யின்றுமுதல். (௨00௫)

வெண்ணெய்திருடாதேநீமெல்லியரைமானபங்கம்
பண்ணுதேசேஷ்டைகளைப்பண்ணுதே மண்ணையள்ளி. (௨00௬)

புண்ணுதேயென்னவுறுக்கிப்பயமுறுத்தித்
தண்ணார்ந்தகைசிவக்கத்தானடித்தாள் கண்ணனிந்தப். (௨00௭)

யார்த்தவொருபள்ளியின்மேலாசைகொண்டுகூடினனிவ்
வார்த்தைவெளிவிடவும்மார்க்கமோ தீர்த்தனிவன். (உ0உஉ)

பன்னுசெயல்கூறிலொருபாரதமதாய்விளையு
முன்னியதைச்சொல்லமுடியாதே யெங்கிலமும். (உ0உங)

விண்டுவென்றுநாமுற்றமேற்பகட்டேயன்றிவற்றும்
பண்டுரியகைப்பொருளும் * பஞ்சமே கொண்டணிந்த. (உ0உச)

பீதாம்பரகௌத்வம்பின்னைக்குரியதிற்தச்
சூதாம்பானுக்கோசொந்தமில்லை மீதூரு. (உ0உடு)

மைவசங்குமேலான்வடபத்ரசாயியிவன்
கைவசம்வேறுஸ்திரியொன்றுங்கண்டிலே (னய்ய. (உ0உசு)

பிரமாவின் சரித்திரம் கூறுதல்.

னரியவுந்திமீதுற்றபிரமனென்போன்
றிரிமூர்த்தியிவனுந்சோக்கை பெருகியவோ (உ0உஎ)

சீரேமுலகமெல்லாமிபாமேபடைத்தனமென்
றோராவகங்கார முலவினான் பேரான. (உ0உஅ)

தாதையுடனெதிர்த்தான்றுணுவழல்மாமுடியைப்
போதரவிற்கண்டனென்றும்பொய்சொன்னான் போதித்துத். (

தாழைமடலதனையுந்தான்கெடுத்தான்பூவுலகில்
வாழிடமில்லாமல்மறுகினான் வேழமொழித் '(உ0ஙு0)

தெய்வமணியார்திலோத்தமையென்பாள்பொருட்டா
லெய்துதலையொன்றையினிதிழந்தா னுய்வுறசீர். (உ0ஙக)

துய்யகலைவேதமதைச்சோமுகாசுரனிட
கையிற்பறிகொடுத்துக்கன்றினான் மெய்யிற். (உ0ஙஉ)

0 கறங்குறுநானேசிருஷ்டிகர்த்தனென்றுனென்னு
விழுந்ததலைபடைக்கவேலான் குழந்தைச். (உ0ஙங)

சிறுவனுரைகேட்கத்தெரியாமல்மாழ்கி
லெறுவிலிபோனின்றுவிழித்தான் கறுவியவன். (உ0ஙச)

பஞ்சாயுதம்.0 கழங்கு-அபிஷேகம்.

ஞேங்கித்தலைதகரவோர்குட்டுவைத்திவனைத்
தாங்குசிறையிலங்குதானிட்டான் வாங்கலுறு. (உ0கூடு)

மைச்சலதிப்பாருலகில்மானிடர்கள்யாவரையு
மச்செல்லாமொள்ளுயமைவித்துப் பகூடமுடன். (உ0கூகூ)

வாழ்ந்திருக்கவுஞ்சிலரைமாவறுமையாலிடைந்து
தாழ்ந்திருக்கவும்பலரைத்தாபித்தான் வாழ்ந்தவரி. (உ0கூஎ)

லாசுகவிநாவலர்களாய்ந்துதமிழ்ப்பாடினுமோர்
காசுதவாலுத்தக்கயவராய் மாகளராய். (உ0கூஅ)

நல்விற்பனமிலராய்நாணுப்பழியினராய்ச்
செல்வநிலையென்றசெருக்குளராய்க் கல்வி. (உ0கூகூ)

யருமைதெரியாமுட்டாளாய்ப்படைத்துவிட்டான்
பரவுசுத்தமுட்டாட்பதுமன் மருவுமிவன். (உ0சஅ)

செங்கரத்திற்றண்டுமெண்டைதீட்டும்படைதவிரப்
பொங்கமுறவேறுபொருளுமில்லைத் தங்குதற்கிங். (உ0சக)

காலயமுமில்லையருள்பூசனையுமில்லை
யேலுமிவன்செய்தியிருக்கட்டுஞ் சால்புறுமென். (உ0சஉ)

குமரவேள் சரித்திரம் கூறுதல்.

மைந்தர்களிற்பின்னவனும்வைவேற்குமரனென்பான்
செந்திருமான்மெச்சுந்திருமருகன் முந்துகுரு. (உ0சங)

வன்னவயன்ருனரியோம்பிரணவத்தின்
றன்னுரையேசொல்லத்தறுகிடினும் பொன்னம்மான். (உ0சச)

பாலனென்றுசற்றும்பச்சாத்தாபமின்றியிரு
காலில்விலங்கிட்டடைத்தகன்னெஞ்சன் மேலுறையுந். (உ0சரு)

தேவருக்கெல்லாமதிபன்றேவேந்திரன்மகளார்
பாவைதெய்வகுஞ்சரிதன்பாலிருக்கக் கேவலமாய்க். (உ0சசு)

வேட்காரகாரதன்சொற்கொண்டுவெனத்துடுப்புக்கி
வேட்காதமிருப்பவேடனுய்த் தூக்குகிழப். (உ0சஎ

பண்டாரமாகிப்பருவேங்கையுமாகிக்
கொண்டார்நகைக்கக்குறம்பாடி வண்டாரம். (உ0சஅ)

வந்திக்குமூரலினுள்வள்ளியின்மேலாசைகொண்டு
முந்துகுலதர்மமுறைமைதப்பிச் சிந்தையினில். (உ0சகூ)

நாணுதலுமின்றியந்தநாறக்குறக்குலத்தில்
வேணுமென்றேசம்பந்தமேவினான் நீணிலத்திற். (உ0ரு0)

பின்னையொருமாமிதனைப்பெற்றவள்மேலாசைவைத்து
மன்னுமதன்வேலையுறமாட்டினான் பொன்போலும். (உ0ருக)

பெற்றோர்க்கடங்குமென்பாபிள்ளையிவனெனக்குச்
சற்றுமடங்கான்றகப்பன்சாமியே தொற்றுவளைச். (உ0ருஉ)

செட்டியிவன்வேலைவேர்கள்சேர்க்கையினாலன்றொருநாட்
† சட்டியிலே 0 கொக்கவிழ்துச்சாட்பிட்டான் மட்டடங்காக். ()

கோழிபிடிக்கியென்றுங்கூருலகிற்பேரெடுத்தான்
வாழ்வணிகமூகையெனவந்துதித்தான் சூழுமலைக்.(உ0ருச)

குன்றுகடோறுந்திரிந்துகூத்தாடியானதல்லா
லன்றவனுக்கேதேனுமாஸ்தியுண்டோ வென்றுஞ். (உ0ருரு)

விநாயகர் சரித்திரம் கூறல்.

செழித்தபுகழ்முத்தமகன்செய்திசொல்லக்கேளீர்
பழிச்சுலகோர்நாளும்பழிக்க வழிக்கனையில். (உ0ருசு)

பவித்தனியிருந்துவேற்றுருவந்தானாகி
மூவாதமெய்த்தூங்கல்மூஞ்சியா யேவெனவே. (உ0ருஎ)

மூன்வாய்ப்பல்லொன்றுடைந்துமூக்குங்கிடையாமல்
லன்வாயொன்றில்லாமனல்வாயாய்ப் பொன்வாய்ந்த. (உ0ருஅ)

கண்ணுஞ்சுருங்கியிருகாதுமுறமாகியயன்
பண்ணிவைத்தகாலுஞ்சப்பாணியாய்த் தண்ணீரின். (உ0ருகூ)

சாலதனையொப்பாய்ச்சரிந்துமகோதரம்போல்
மேலும்பெருவயிறுவிங்கியே சூலாணம். (உ0கூ0)

† சட்டி-ஆறுவதுதிதி. 0 கொக்கு-மாவானசூரன்.

போலுமுடல்மூவிடத்திற்பொத்துமிகச்சீழ்வடிந்து
மூலத்திலேவிழுந்துமுற்றினதும் பாலகனைப். (உ0சுக)

பற்றியொருவீட்டெலியும்பாய்ந்துகொடுபோமென்றாற்
பெற்றமனம்பித்தலவோபேசுங்கால் சற்றுமிதைக். (உ0சுஉ)

கண்டுமனந்தாழாமற்காலவிடமென்னுநஞ்சை
யுண்டேனெடுங்கியுடன்மெலிந்தேன் விண்டுவெனும்.(உ0சுங)

மாமனுர்தன்வாயில்மண்போட்டறைந்துகொண்டு
சேமவுடல்கறுத்துத்தேங்கினுன் பூமலரோ. (உ0சுச)

னின்னமறைவாயிருந்துதொழிலயர்ந்தங்
கன்னமிறங்காமலலையிருன் மன்மதனுஞ். (உ0சுரு)

சீற்றவனலால்வெதும்பித்தேடுமெந்தன்கூர்விழிக்குந்
தோற்றுன்பிர்மாதிகட்குந்தோற்றுனே யாற்றுகுகன். (உ0சுசு)

தன்பிறவிக்குள்ளஞ்சலித்துமனங்கசிந்து
பின்புகண்ணீராறுய்ப்பெருகியே முன்பிலய்ய. (உ0சுஎ)

மீறுகின்றசத்திமிகவேயதிகரித்துக்
கூறுய * பிணிமுகத்திற்கொண்டுநின்றுன் மாறுது. (உ0சுஅ)

கண்ணேடுகண்ணையொருக்காலும்பொருந்தாமல்
விண்ணேர்களெல்லாம்விழித்திருந்தா ரெண்ணுமெங்கள். (உ0சுகூ)

காரியவிர்வாகமெல்லாங்கண்டீரோவின்னமுமுன்
டாராலுஞ்சொல்லவடங்காதே நேர்மொழிந்த. உ0எ0)

விச்சரிதங்கேட்டுமனமேங்காதீரெவ்விதமும்
பட்சமுடனுங்களைக்காப்பாற்றுவே னிச்சயங்கா. (உ0எக)

ணின்னதாரித்ரமெவராலொழியுமென்றே
யுன்னிப்பலவாயுசாவினேன் அன்னவனைச் (உ0எஉ

சிவபெருமான் பாட்டுடைத்தலைவராயறிவித்தல்.

சித்தத்திற்கண்டேனச்சேரமானுக்குமிவன்
பத்தத்தனையதிகபண்பினு னித்தலத்தில். (உ0எங)

மங்களமென்மேலும்வளரமனுவிக்யானச்
செங்கோல்செலுத்துந்திறலுடையான் செங்கமலப் (உ0எச)

---

* பிணிமுகம்-மயில்.

பூமானுரத்தான்புகழுடையனேந்திரநற்
கோமானளித்தகுலக்கொழுந்து ஓமெனவு. (உ0எடு)

மூவடியாய்நின்றுலகில்முத்தொழினடாத்துமெந்தன்
சேவடியையுள்ளிருத்துஞ்சிந்தையான் மாவளஞ்சேர். (உ0எகூ)

திண்ணியவான்முந்தியவோர்ஜென்மாந்திரத்திலவன்
பண்ணியதபோபலத்தின்பான்மையால் மண்ணுலகை. (உ0எஎ)

யாளப்பிறந்தானவனேமனுகுலத்தி
னீளச்சிறந்தநிலைமையினுன் வேளைப். (உ0எஅ)

பொருந்துமெழிலான்புலவர்கள்கொண்டாடித்
திருந்துகவிமாலைபுனைசீமான் பரிந்தேனது. (உ0எகூ)

பாங்குரியதோழனையொப்பானகனபாக்கியவா
னேங்குவலக்கண்ணுமுயர்குலத்த ஞன்குமறை. (உ0அ0)

யாய்ந்தவாக்குநாவலர்க்குமாதுலர்க்குமிக்கபொரு
ளீந்துசிவந்தவிருகரத்தான் ஞ்ந்துமிகப். (உ0அக)

பொன்மலர்கொண்டேத்துசிவபூஜாதுரந்தரன்மா
தன்மபூபாலன்சவுரியவான் அன்னமரி. (உ0அஉ)

யாரணமுங்காணவறியாநமதருளைப்
பூரணமாய்ப்பெற்றபுகழ்வேந்தன் வீரசிவ. (உ0அங)

கங்கைநகர்க்காதினகாவலவன்பாவலர்மேற்
றங்குமபிமானமுள்ளசற்குணவான் வெங்கயந்தேர். (உ0அச)

கூந்தலணிமாவுகைக்குங்கோமானுயர்துரைச்சிங்
கேந்தரனுக்கிப்போழ்திலிதமுறநா ஞய்ந்தெழுதி. (உ0அஞ)

யேந்துதிருமுகமொன்றீவேனதையவன்பாற்
போந்துநல்குமெல்லைமனம்பூரித்துச் சாந்தகுண. (உ0அசு)

விற்பனவானுந்தமக்குவேண்டுவனவெவ்வளவோ
பற்பலசம்பத்துகளும்பாலிப்பான் முற்பாண, (உ0அஎ)

பத்திரனென்பானொருவன்பாரிலிலம்பாடடைந்
தஸ்திதனைநீக்கக்கருதியே பத்திதனி. (உ0அஅ)

லன்பன்மலைநாட்டுக்கதிபனந்தச்சேரமான்
தன்பாலனுப்பத்தகுந்தபடி பொன்பரிசு (உ0அகூ)

செய்தானவனிலுமித்தேர்வேந்தனீகையினிற்
கைதானென்சொல்வேனக்கற்பகமே மெய்யுரையீ. (உகூ0)

சிவபெருமான்பாட்டுடைத்தலைவற்கு திருமுகம்கொடுத்தல்.

தாகையினுனீவிரனேவர்களுமிக்கணமே
யேகியந்தப்பூதிபாலெய்திய மாகனமாய்த். (உ0கூக)

தேக்குபொருள்பெற்றுச்செழித்துவாழ்வீர்களென்ற
வாக்குக்கடங்காமகிழ்ச்சிகொண்டு நோக்கரிய. (உ0கூஉ)

சீலர்மதுரேசரையுந்தேவிகயற்கண்பதமுஞ்
சாலவணங்கித்தமிழ்ப்பாடி யாலயத்தை. (உ0கூகூ)

முக்கால்வலம்புரிந்துமூர்த்திதிருமுகம்பெற்
றக்கோவில்வாயிலரணீங்கிச் செக்கர்வண்ணக். (உ0கூச)

திருமுகம்பெற்றுப்பிரபுவின் சமுகத்துக்கேகுதல்

கோகனகமாதுகுடிகொண்டசிவகங்கைநகர்க்
கோகையுடனேகவாருமித்தோங் காகங்கள். (உ0கூரு)

கூவிவலமாகிவரக்கோலக்கருடனிடந்
தாவியரிகீர்த்தனமிசைப்ப யாவுமினிக். உ0கூகூ)

கைகூடிவந்ததெனக்காதலுடனெய்தியுயர்
மெய்கூடிவாழ்நகனாமேவினேங் தெய்வீகத். (உ0கூஎ)

சிவகங்கை நகரச்சிறப்பு.

தேரோடுவீதிகளுஞ்செம்பொனெடுமாமதிலுங்
காரோடுலாவுகவிச்கொடியுஞ் சீரார். (உ0கூஅ)

வனசத்திரள்மலிந்தவாவிகளும்வந்தோர்க்
கனசத்திரமுந்வுமன்புந் தினமுமறை. (உ0கூகூ)

யாய்ந்துநெறிதிறம்பாவந்தணர்கள்வீதிகளும்
வாய்ந்தவணிகர்மணிமறுகும் வேந்தருக்கு (உக00)

மாவியமாமருட்முடிசூட்டநல்கும்
பாவலர்வேலாமம்பிரான்மறுகுங் கோவைசியர். (உக0க)

வீதிகளுமிந்த்ரகுலவீரர்மணிவீதிகளுஞ்
சாதிபலவான்தத்தார்தன்றெருவு மோதுசனக். (உகஉ)

கூட்டமுடனேதினமுங்கொள்ளல்விற்றல்செய்துநலங்
காட்டியொழுங்கானகடைத்தெருவுந் தீட்டியொளிர். (உகஊ)

மாசுதைகள்தீறறிவயங்குமேன்மாடிதிகழ்
ராசபந்துக்களியல்மறுகும் தேசுலவு. (உகஎ)

மன்னகரத்தினலங்காரமத்தனையு
மென்மேலும்பார்த்துவியப்பூறிப் பின்னுமந்த. (உகஏ)

அரண்மனைச்சிறப்பு.

மாநகரமென்னுமதானிப்பதகமிசை
யானநடுநாயகமணிபோல் வானளவிச். (உகஐ)

சிங்காரமாகச்சிறந்தமகாமேருவெ
மங்காதவாசல்மணிமுகப்பும் தங்கவுகா. (உகஒ)

மாடிகளுஞ்நற்றிளைந்தெடுமதிலும்
மேடைகளும்பந்தடிக்குமேடைகளும் நீடுதமிழ். (உகஓ)

தேரிங்கிலீஷ்முதற்றேகபலமாஞ்சிலம்பஞ்
சார்வுறமேலோங்குகல்விச்சாலைகளும் பேர்பெரிய. (உகஔ)

கோபுரமுஞ்சொர்ணக்குடங்கள்பதித்திலங்கு
தாபரமும்வெள்ளைச்சயடாலும் தூபியினில். (உகக0)

மங்குல்படிந்துலவும்வண்மையெலாங்கண்டிதுவே
யெங்கோனரண்மனையென்றெய்திநேர் திங்கள்மணி. (உகக)

நற்படிகத்தாலமைத்தநல்லசபாமண்டபமும்
பொற்பணியினுலிழைத்தபோதிகையு முற்படுதே, (உககஉ)

வஸ்தானசத்திரதர்மாசனமுஞ்சீமையய
னத்தொடுதர்பார்புரியாபீசுகளு மொய்த்தஜனக். உককக)

கூட்டமிடும்பேரொலியுங்கூரியபியோன்கணின்று
க்யாட்டுடன்பாராக்கொடுக்குங்காவல்களும் நாட்டரசர். (உককச)

நாடித்திறைசெலுத்தநற்சமயங்கிட்டாமற்
கூடிக்குலாவுசதிர்க்கொட்டகையும் [illegible]

வாரணத்தினுலயமும்வாம்பரியின்சாலைகளும்
பூரணகும்பங்களிட்டபொன்முடியும் வீரர்களை. (உகஙசு)

வேங்கையுடனேபொருதவிட்டுவிளையாடல்புரி
தாங்குமிருகாசயத்தின்சாலைகளும் பாங்கான. (உகஙஎ)

பூஷணநல்லாடைபொருந்துநிதிபொக்கிஷமும்
மாசகலுக்ராணமணிமண்டபமும் வாசமனோ. (உகஙஅ

விர்த்தியாபீசுமிந்தமேதினிக்காதாரமுள்ள
வர்த்தனைரிக்காரட்டுமால்களுமெய்ப் பத்தியுட. (உகஙகூ)

னிம்பர்தனைக்காக்குமிராஜராஜேஸ்வரியா
மம்பிகையாள்வீற்றிருக்குமாலயமு மம்புவியாள். (உகஉ0)

மாபோஜராஜேந்த்ரன்வந்துதினஞ்சேவைபுரி
தேபூஜைக்கோவிற்றிருப்பணியும் ராஜகுல (உகஉக)

வன்னநடைமின்னார்களார்ந்துஜலக்கிரீடைசெய்யும்
வன்னமணிநீராவிமண்டபமும் அன்னவதில். (உகஉஉ)

வாழைகொழுமிச்சைவளர்மாதளைகமுகு
சூழுமலர்வாசமிகுசோலைகளுங் கேழ்கிரணத். (உகஉங)

திங்கள்மணியாலிழைத்துச்சேருஞ்சிகரமதிற்
றங்கக்கலசந்தனைநாட்டிப் பொங்கு (உகஉச)

மவிரொளியம்பாரிபுனைந்தஷ்டகஜந்தாங்குஞ்
சவுமியவிலாசச்சபையுங் கவினுறவே (உகஉடு)

தங்கத்தகடழுத்தித்தாமணிகுயிற்றி
யெங்கும்பளீரென்றிளங்கதிர்போ லெங்கள். (உகஉசூ)

சவுரியவான்மேவிச்சபைவீற்றிருக்குங்
கவுரிவிலாசத்தின்கதிப்பும் நவமுலவு. (உகஉஎ)

செம்பொனணிமேனிலமுஞ்சித்ரமணிமேடையும்பொற்
கம்பமிகுநாட்டுபலகட்டிடமு மம்பவளத். (உகஉஅ)

தூண்கணிறுத்தித்துலங்குகருங்கற்சவுக்கை
மாண்புகளும்ரத்னமணியரங்கும் காண்கரிய. (உகஉகூ)

விந்தையெல்லாங்கண்டுவியப்புற்றிமையவர்கோ
னுந்துமணிமாலுமிதற்கெவ்வாதென் றந்தமுடன். (உகஙO)

சிந்தைமகிழ்ந்துஜெயஜெயவென்றார்ந்தஜனச்
சந்தடியுட்சிக்கித்தகையாறி விந்தைவளர். (உகூக)

மன்பானெருங்கிவருகாரியக்காரர்
தன்பானெருங்கிமெல்லச்சாற்றினே மென்சார்ந்த. (உகூஉ)

நீவிர்கள்யாரென்றார்கிகழ்ந்ததையெல்லாம்புகல
வாவலுடன்கேட்டவருமன்புற்றுத் தேவபிரான். (உகூகூ)

வாய்மைதருநல்லமகிழ்ச்சிச்சமயமிதே
போய்வாருமென்றுள்ளேபோகவிட்டார் தூயமணி. (உகூச)

பத்திபத்தியாகப்பதித்தகவுரிவிலா
சத்திலிலங்குந்தனிமுகப்பிற் கத்தனங்கு. (உகூடு)

பீதாம்பரமுடுத்திப்பின்னுநிலையங்கிதொட்டு
மீதார்ந்தசால்வையதின்மேலணிந்து ஆதியடி. (உகூசு)

சேருமுடிமீதிற்றிகழ்ந்தமகுடமகா
மேருவிடைத்தோன்றும்வெயில்நிகர்ப்பச் சாருமிரு. (உகூஎ)

காதில்வயிரக்கடுக்கனொடுமுருகுஞ்
சோதிப்ரகாசச்சுடர்விரிக்கச் சாதிமணி. (உகூஅ)

யங்கதகேயூரவணிகண்டிவாகுவலை
யங்கள்புயத்திலழகார்ப்பச் செங்கமலை. (உகூகூ)

மார்பினில்முத்தாரமதாணிப்பதக்கமுடன்
றார்பொருந்துபூணூற்சரமிலங்க நேர்கரத்திற். (உகசஂ)

கைக்கடகந்தோடாக்கணையாழிமோதிரங்கள்
மிக்கவெழில்காட்டிமினுமினுக்க வுக்கமதிற். (உகசக)

சிங்கமுகப்பிட்டுசிறந்தநவரத்னமணித்
தங்கவரைஞ்ஞாணுந்தகதகென வெங்களத்திற். (உகசஉ)

சத்துருக்களாவிதனையருந்துங்குற்றுடைவான்
வைத்திடையிற்சேர்த்துவரிந்துகட்டிக் கத்துகடல். (உகசகூ)

பிரபுவின் கொலுச்சிறப்பு.

கீர்நிலமெலாம்புரக்குமால்கவுரிவல்லவனெம்
கோன்துரைச்சிங்கேந்த்ரன்கொலுவாகத் தீரனே. (உகசஎ)

ஜெயமாதுநின்றுஜெயம்ஜெயமென்றோதிப்
புயமேனடனம்புரியச் சுயமதிய. (உகசரு)

மாமுகத்தைத்தன்னுடையமாளிகையென்றேமதித்துப்
பூமலராள்மேவிப்பொலிந்தோங்கப் பூமா. (உகசகூ)

பராக்குபலவீமாபராக்குரெகுராமா
பராக்கென்றுகட்டியர்கள்பாட விராக்கதிர்போற். (உகசஎ)

கொங்குலவுபூச்சக்ரவாளக்குடைநிழற்ற
மங்கையர்கள்வெண்சாமரையிரட்டப் பொங்குவியம். (உகசஅ)

பூவாடைபோலுமிகப்பொம்மென்றொலிக்கரட்டைப்
பாவாடைகுஞ்சம்பணிமாற மாவீரே. (உகசகூ)

மத்தளங்கைத்தாளசுரமண்டலம்புள்ளாங்குழலோ
டொத்திசைக்கராகவொலிமுழங்கத் தத்தைநிக. (உகரு0)

ரன்னவிலைமாதரபிநயங்கள்பாராட்டி
நன்னயஞ்சேரின்பநடம்புரிய பொன்னன்ன. (உகருக)

எம்ப்ரஸ்மகாராணியார்கவர்னர்யாவர்களு
நம்பியுளமதிக்குநற்கனவான் தென்புமிகும். (உகருஉ)

தண்டுசிவகங்கைக்கரசுநிலைநாட்டிவைத்து
விண்டலத்துங்கீர்த்திபெற்றமேன்மையான் தண்டுளவ. (உகருங)

நாராயணுயநமவென்றனுதினமும்
நேராய்த்துதித்துவருநேர்மையான் சீரார்ந்த. (உகருச)

தொன்மதுரைமீனாக்ஷிசோமசுந்தரேசரிரு
பொன்மலர்த்தாள்போற்றும்புனிதவான் நன்மைதிகழ். (உகருரு)

மங்களமல்லேனிகுலவானழகர்சாமிதரு
சிங்கமெனவந்துதித்தசெல்வவான் பொங்கு. (உகருகூ)

சகலகலைவலவனயஜனகரமணியநிபுண
னகிலமுமுதிசைபரவுமமிர்தகுண னுகுதருண. (உகருஎ)

வுதிதமுகிலனையகொடைவுதவுகரதலனிலகு
சசிவதனவபயஜெயதரபுனிதன் வசியமிக. (உகருஅ)

மதமெழுதுபுயசயிலவனசதளநயனகெறு
விதகரடசமரகரிமிசையுதையன் மதனதுரை.(உகருகூ)

பண்டலர்தண்டமடாந்துஜெயங்கொடு
வண்டடர்தும்பைவனேந்திசை கொண்டிடு. (உகசூ0)

தந்திரநன்சதுரங்கதளஞ்செறி
யிந்திரனென்றுலகின்புற வந்துபுகழ் (உகசூக)

மன்னுஜமீன்ஏஜண்டிமாலவேங்கடசாமி
மன்னனருகில்மகிழ்ந்திருக்கப் பின்னனுயர் (உகசூஉ)

காரியவான்மானேஜர்காசிவிஸ்வநாதமுகில்
கேரிருந்துசீமையகவானிகழ்த்தப் பாரிலா. (உகசூங)

தாயஞ்செலவுஞ்ஜகராஜர்கப்பமதா
லாயவரவுமதன்பெருக்கும் நேயமனோ. (உகசூச)

விர்த்திச்சிரஸ்தேதார்மிக்ககருணீகர்களும்
வர்த்தனைமிகுங்கணக்குவாசிக்கச் சித்தமதி. (உகசூரு)

வாய்ந்தவவதானவக்கணைகள்சோர்வுபடா
தாய்ந்தெழுதுநல்ராயசகாரர் வேந்தர்விடும். (உகசூசு)

அர்ஜியைவாசித்தங்கவர்க்கெழுதுமுத்தரவிற்
சற்சமையங்கண்டுசயன்வாங்கச் சொற்சிறந்த. (உகசூஎ)

பார்வேந்தர்சூழ்ந்துபணிந்துமனுக்கேட்ப
யோர்வேந்தர்தத்தாயல்கூற வீரியத்தைச். (உகசூஅ)

சார்ந்தளகர்த்தர்களுந்தானுபதிகளுங்கற்
றோர்ந்தமனுசாஸ்திரவுசிதர்களுந் தேர்ந்திடமன். (உகசூகூ)

னீதிபுகழ்ந்தோதநெடுநாட்சிறையிலுற்றோர்
பாதமதில்வீழ்ந்துபணிந்துகெஞ்சப் பாதத்திற். (உகஎ0)

சூட்டியகண்டாமணியுஞ்சோமத்தலைவிருதும்
நீட்டுசுடர்காட்டிநிகழ்ச்சியுறத் தோட்டுமல. (உகஎக)

ரானனமார்தெள்ளமுதவம்புவியின்சோதிகண்டு
மானவர்கட்காவிமலரவிழச் சேனைதிகழ். (உகஎஉ)

ராணுவக்கூட்டங்களிடைந்துநெருங்கவலி
யாணவஞ்சேர்தந்திகிள்ளையார்ப்பரிக்க நீணிலத்தில். (உகஎங)

மாவளமுற்றோங்கிவளர்குவளைவேலிநகர்ச்
சீவிதம்பெற்றோங்குகனசெல்வத்தார் மேவுகன. (உகஎச)

ராஜாக்கூட்டங்களிதஞ்சேரொழுங்காக
நேசமுடன்சூழ்ந்துநிறைந்துநிற்கப் பேசுபுளி. (உகஎரு)

யங்குளத்தில்வாழ்வோரரியகுலகர்த்தாக்கள்
வங்கிசத்தில்வந்தமரபுடையார் பொங்குபட்டை. (உகஎசு)

நாமறுதலிற்றுலங்கநாய்க்கமார்வாளேந்தி
மாமடங்கல்போலுமருங்குநிற்ப் வாய்மைமிகு. (உகஎஎ)

சேருவைக்கூட்டங்கள்சினத்தவடிவாளபிடித்துப்
போரெங்கேயென்றுபுயம்புடைக்க நேர்கையினிற். (உகஎஅ)

நங்கமடற்கொண்டுநலஞ்சார்வெள்ளிலைச்சுருளீந்
தங்கடப்பக்காரரடுத்துநிற்கத் தங்கமொரு (உகஎகூ)

பாரமிட்டுவேலைப்பணிதிகழ்பொற்காளாஞ்சிக்
காரர்கைவேலைத்திக்கதித்துநிற்க வாரமணிச். (உகஅ0)

சுற்றிலங்கச்சாலர்தைத்துச்சோடிவைச்சிற்றுலவட
வெற்றிவிரிறிக்காரர்வீசிநிற்க முற்றுலிலுங் (உகஅக)

கள்ளற்கஞ்சாதகுடைக்காரரிருபாலுநின்று
வெள்ளித்தீவட்டிமிகப்பிடிக்கத் தெள்ளுவடி. (உகஅஉ)

வேலைக்கள்மொய்த்தவெடிக்காரர்மற்றுமுள்ள
காலாட்கள்கைகட்டிக்காத்துநிற்கச் சூலார்ந்த. (உகஅங)

கார்க்குலங்கள்போலுங்கருங்கிடாயொன்றொடொன்று
மூர்க்கமுடன்றுக்கிமுனைபொருதப் போர்க்குவரக். (உகஅச)

கூவிநிபமின்றிக்குரோதித்தமர்பொருதுஞ்
சேவலொலிச்சத்தஞ்செவிடுமண்ட மேவுசெவற். (உகஅரு)

காடைகவுதாரிகருங்கொண்டலாத்திகளுஞ்
சாடியொன்றோடொன்றுசமராடச் சோடியவஸ். (உகஅசு)

தாதுகளுமல்லாகளுந்தந்தொழிலைக்காட்டிநல
மீதுயர்வேடிக்கைமிகவிளைக்கச் சோதிடத்தி. (உகஅஎ)

லஞ்சாததீரரரண்மனைப்புரோகிதாள்
பஞ்சாங்கமோதிப்பலனுரைக்கக் கஞ்சமலர்க். (உகஅஅ)

கோவணங்கும்தேபூஜைக்கோவிற்குருக்கள்மார்
தேவப்ரசாதந்தினமுதவ மேவிதுபோற். (உகஅகூ)

நட்டிலிட்டுமற்றத்தலத்தார்களீந்துபரி
வட்டமதுகட்டிமலர்சூட்டச் சிட்டரெனு. (உகக0)

மாகனவித்வான்களிசைவாழ்த்தியருகிருக்கப்
பாகவதாள்சங்கீதப்பாட்டுவைக்கப் பூகம்விளை. (உகக்க)

கேழ்மணிசேர்கொட்டகுடிக்ராமமகாஜெனமும்
வாழ்வுயர்வேம்பத் தூர்மகாஜெனமுஞ் சூழ்பிரம. (உககூஉ)

னூர்வாழ்மகாஜெனமுமோதருவேதாங்கமதைப்
பார்வையினிற்றேர்ந்தகனபாடியமும் பூரணமாய்ப் (உகக்ஙூ)

போதநெறியாகமபுராணமுணர்சாஸ்திரிகளு
மாதிமறைவைதிகநூலந்தணரும் நீதிபர. (உகக்ஙச)

மாசிர்பொருந்திமகிழ்நிலவாழ்ந்திவெண்
ணீசாவதித்தக்ஷதைவழங்கப் பூரிகளும். (உகக்ஙரு)

மன்னர்களிற்றிப்திபெற்றமானுந்ரபாணடியனபோன்
மின்னியசிங்காதனத்திலவீற்றிருந்தா னன்முகிலைக். (உகக்ஙகூ)

கண்டமயிலிட்டமெனக்காமுற்றிறைஞ்சியெங்கோன்
கொண்டகருணைக்குறிப் பிந்து மண்டலிகர். (உகக்ஙன)

மகாநாட்டாரிப்புலவைக்கண்டுபுகழ்தல்.

மன்னுவிஜயவிக்ரமராக்காசிலாக்கியசம்
பன்னுநுவக்தைக்கப்பாண்டியர் கன்னுவ. (உகக்ஙஅ)

தாராதனவடலர்தாராவெளியவர்க்கா
தாராவுதாராசவுந்தரா தீரரண. (உகக்ஙக)

வீராகெபீராவிநோதரசகல்வியலங்
காராசிங்காராகண்டீரவா ஆரமுத. (உஉ00)

சோமாகல்லன்னசத்ரசோமாசிறந்தஜெப
பூமாவிற்காமாபுரந்தரா தாமபல. (உஉ0க)

வீமாசங்க்ராமாவிவேகப்ரதாபபல
ராமாசீராமாநரேந்திரா மாமதகோ. (உஉ0உ)

தண்டாவுத்தண்டாசமரகோலாகலதோர்த்
தண்டாதீதண்டாதசற்குணு தண்டமிழிற். (உஉ0ங)

றேர்ச்சிப்பெருங்கடலேதேசாபிமானமதி
லூர்ச்சிதமுற்றேங்குமுடையானே மார்ச்சரியங். (உஉ0ச)

காட்டுமிகலார்கருவறுத்தன்னார்பதியைத்
தீட்டுபுலவோர்களிக்குஞ்செம்மலே நாட்டமொடு. (உஉ0ரு)

சொற்றவறுவள்ளல்துரையுடையணேந்திரமால்
நற்றவத்தால்வந்தருளமணியே கற்றவரைக் (உஉ0சு)

காக்கும்பெருமானேகண்ணகன்றஞாலமதி
லார்க்கும்பெரியவரசனே தேக்குபுகழ். (உஉ0எ)

போஜராஜேந்த்ராபுவனபரிபாலகா
ராஜராஜேந்த்ரஜனரக்ஷகா விசியன்னுன். (உஉ0அ)

மான்சிரமற்றேயவடியாசுகந்தொடுத்த
கோன்றுரைச்சிங்கேந்த்ரவெங்கள்கோமானே மானிலத்திற். ()

ருங்கரியபஞ்சமதிற்றுனலைந்துவாடினதுந்
தேங்குமதுரைச்சிவன்பாற்செப்பியது மாங்கவரும். (உஉக0)

தேவரீர்க்காகத்திருமுகந்தந்தாரெனவு
மாவலுடன்கூறியருருகின்றேங் காவலனும். (உஉகக)

பிரபுசிவபெருமானைத்துதித்தல்,

தென்மதுரையீசரென்றதெள்ளமிர்தமாமொழிகேட்
டின்பமுறப்பூரித்திருதோளும் நன்கைத். (உஉகஉ)

திருமுகத்தைவாங்கித்திருவிழிவிலொற்றிப்
பரவிப்பலதரமும்பார்த்துக் கருணைபுரி. (உஉகங)

மங்கையுமைபாகாமனேகராமான்மழுவுஞ்
செங்கைதனிலேந்துஞ்செயதரா கங்கைச். (உஉகச)

சடாதராவெள்ளிச்சபைதனிலன்றாடு
நடாகராவெள்ளிமலைநாதா கடாசலத்தின். (உஉகரு)

போர்வையுடையாபுராந்தகாவின்மதனைப்
பார்வையினிற்காய்ந்திடுபராபரா காரனைய. (உஉகசு)

கண்டாவகண்டாகராசங்கராவடியர்
கொண்டாடிவாழ்த்துங்குருபரா மண்டியிர்கட். (உஉகஎ)

காவியனையாயரகரசம்போமகா
தேவாவென்றேத்தியுட்டியானித்துக் கூவியெமமை. (உ௨௧அ)

வாருமெனவழைத்துமன்னியவிப்பஞ்சமதிற்
சார்வின்றிநின்றோதயங்கினீர் பாரிலுங்கட். (உ௨௧௬)

கன்பாகயாமிருக்கவையோ நீரிற்றைவனா
யென்பாலேன்வாராதிடைந்தீர்கள் என்பாரம். (உ௨௨0)

பூண்டானெனையும்பொருளாய்மதித்தனரோ
ஆண்டாரென்மேற்கருணையானவோ தேண்டியன்னுள் (உ௨௨௧)

ரேனுமால்காணுதவேதாந்தமூர்த்திபரஞ்
சாதிதிருவாய்மலர்ந்தசொற்போலும் போதுகன. (உ௨௨௨)

பாக்கியங்கள்நல்கியுங்களபஞ்சமதைநீக்கிநிதி
தேக்களகையானெனவுஞ்செய்வனெனக் கோக்குவடு. (உ௨௨௩)

பிரபுநாட்டாருக்குவெகுமதி செய்தமைகூறல்.

மேங்கவுயர்ந்தோரிறையாயிரக்கலங்கொண்
டோங்குகளஞ்சியத்திலோர்தினுசாய்ப் பாங்குளசம். (உ௨௨௪)

பாவுரியநெல்லிற்பதினாயிரக்கலமும்
பாவுகின்றவிந்துமதிற்பாதியாய்த் தாவியமுன். (உ௨௨௫)

னேர்க்குத்தவங்காவெருதுக்குமூங்களொடு
பார்க்குட்பலுகப்பலுநிறையுங் கார்க்களிற்றைப். (உ௨௨௬)

பார்த்துநகைக்கும்பரம்புக்கடாக்கள்வயற்
சேர்த்துக்கிடைமறிக்கச்செம்மறியு மார்த்தலுறத். (உ௨௨௭)

தக்கபலபூஷணமுஞ்சார்ந்தபலதினுமம
ரொக்கத்திலோரிலக்ஷரூபாயு மிக்கவுள்ளத். (உ௨௨௮)

தேலையவாநீங்கச்சிறப்புகளுஞ்செய்தபின்னர்
மேவித்திருமுகவிலாசமதைப் பூவுலகிற். (உ௨௨௯)

இப்பிரபந்தவித்வானுக்கு சம்மானஞ்செய்தல்.

சீர்த்தியுறப்பாடித்திகழவரங்கேற்றிவைத்த
மூர்த்திமுடிக்கங்கைமுதுகுலத்தடன் பார்த்திபர்கொண். (உ௨௩0)

டாடுமெமிர்தகவிவில்லியப்பனுக்கு
ஓடுடையான்சிந்தைநலிகூர்ந்து நீடுமெணி. (உ௨௩௧)

த்துவயிரக்கடுக்கன்மோகனப்பொன்மாலையொளிர்
ளத்துச்சரப்பணிதங்கக்கொலுசுஞ் சித்ரமணிக். (உ௨௩உ)

கக்கடகந்தோடாகணையாழிபொற்பதக்க
க்கரத்தன்க்குண்டலங்கண்மேன்முருகு சொக்கமணிக் (உ௨௩௩)

ண்டசரம்பாதசரங்கல்லிழைத்தமோதிரம்பொற்
ண்டையரைஞாண்சலங்கையுடன் கண்டைரெட்டைக். (உ௨௩௪)

ாலுவைபீதாம்பரங்கள்தக்கநிலையங்கிவ்ணச்
சலைகண்டைச்சோமன்திரப்பாகு மேல்வையுட. (உ௨௩௫)

னையாயிரம்பொன்னுமம்புறவேநல்கியென்றும்
வையமதிற்றனபேர்வளர்க்தோங்கக் கைமேலாய்ச். (உ௨௩௬)

ாகவுதமாகத்தகுந்திராமமொன்று
ாசனமுஞ்செய்துமிகத்தானல்கி வாசமெந்தை (உ௨௩௭)

மீடுகட்டித்தந்தான்வியன்சூடைபல்லக்கிமாச்
சோடினையாய்த்தந்தான்சுகந்தத்தான் நீடினார். (உ௨௩௮)

மேன்மைவளரேஜண்டுவேங்கடவாமிமுகில்
தான்மகிழ்ச்சிகொண்டியர்ந்தசாலுவையும் நாறாது. (உ௨௩௯)

பொன்னுந்தகுந்தபலபூஷணமும்பூஸ்திதியும்
நன்னயமதாய்த்தமிழ்க்குரல்கினான் பொன்னுலவும். (உ௨௪0)

காசிவிஸ்வநாதகனவான்மகிழ்ந்துமணித்
துசொடுபொற்கண்டிகையுஞ்சூட்டினான் நேசமுள்ளா. (உ௨௪௧)

செல்லாருமிக்கநிதியீந்தாருயர்குளந்தை
வல்லான்றுனைச்சிங்கமாலேந்த்ரன் கல்வியுணர். (உ௨௪௨)

நேசத்தமிழ்ப்புலவனீமலகில்வேறிடம்போ
யாசிக்காவண்ணமருள்கூர்ந்து ராசிக். (உ௨௪௩)

கனகாபிஷேகங்களிப்புறவுஞ்செய்தான
றனதான்யசம்பத்துந்தந்தான் இனிய. (உ௨௪௪)

வமிர்தகவிச்சிங்கமிவனுமெனவுங்கூறிச்
சமுகவித்துவானெனப்பேர்தந்தான் சுமுகமுடன். (உ௨௪௫)

சீர்தந்தான்செல்வத்திறந்தானெண்டிசைக்கும்
பேர்தந்தான்பேசப்பெலன்றந்தான் நேர்தந்திப். (உ௨௪௬)

பார்மன்னன்செய்திடுமிப்பாரவுபகாரம்போ
லார்முன்னஞ்செய்தார்சொல்லஞ்சுகமே சீர்மன்னு. (உஉசஎ)

மண்ணுலகையாளவந்தமால்துரைச்சிங்கேந்த்ரதுரை
யண்ணியநாட்டாரையருகழைத்து வண்மையுளீர். (உஉசஅ)

சிந்தையுடனீவிரினித்தேவையுள்ளகாரியத்துக்
கெந்தனிடம்வாருமினிதளிப்பே னுந்தமூர் (உஉசகூ)

சென்றளகையான்போற்சிறந்துமிகவாழ்ந்திருப்பி
ரென்றுவிடைதந்தானிறையவனும் வென்றிதிகழ். உஉரு0)

மாமாறன்றன்னையுளம்வந்தித்திறைஞ்சியந்தக்
கோமான்புகழைமிகக்கொண்டாடிக காமுற். (உஉருக)

நடர்ந்துஜனம்நெருங்குமாஸ்தானவாசற்
கடந்துவெளிமாலிற்கலந்து மடங்கலன்னான். (உஉருஉ)

நாட்டார்கள் தங்களுர்சேர்ந்து வாழ்தல்.

தந்தபொருளெல்லாந்தகுஞ்சகடமீதேற்றி
விந்தையுள்ளவாகனங்கண்மேலிவர்ந்து சிந்தைதனி. (உஉருகூ)

லொவ்விப்பொருள்பகிர்ந்தங்குண்மையுறவாடிமகிழ்ந்
தவ்வவர்களுர்புகுந்தாரப்பொழுதே தவ்வியிதைக். (உஉருச)

கண்டமடமாதர்களுங்காதலரும்பூதலருங்
கொண்டுடல்பூரித்துக்குதித்தெழும்பிக் கண்டமட்டு (உஉருரு)

முண்டார்களித்தாருகந்தார்செருக்கடைந்து
கொண்டானடித்தார்குலாவினா மண்டுகுமுற். (உஉருகூ)

கற்றைச்சடைப்பிடித்தகட்டறுத்துச்சிவிமலர்ச்
சுற்றுஞ்சிரவணியுஞ்சூட்டினா மற்றுமுள்ள. (உஉருஎ)

பீதாம்பரமணிந்தார்பேராபரணமெல்லாம்
பாதாதிகேசம்வரைபண்ணிட்டார் மாதிரதி. (உஉருஅ)

போலழகுபெற்றார்புருடர்களுமவ்வாறே
சீலமதனெப்பாய்த்திருந்தினரே சேல்விழியார்க். (உஉருகூ)

கொட்டியவெளவாற்போலுலர்ந்ததனங்கள்விம்மிப்
பொட்டெனப்பூரித்துப்புடைத்ததுகண் டிஷ்டமற்றங். (உஉகூ0)

ாமையப்பர்போலுமடங்கிமிகவேகிடந்த
ாமயநாயக்கர்கதித்தெழும்பி யேமமென்றுஞ். (௨௨௬௧)

ாமமென்றும்பாராமற்சந்ததமதேதொழிலாய்க்
ாமவிளையாட்டிற்கதித்தனரே பூமிசையில். (௨௨௬௨)

மழைவருஷித்துப் பஞ்சம்நீங்குதல்.

ன்னுயிர்கடோறுமருவுசிவசொக்கேசர்
கன்னருள்பூரித்ததயவறிந்து பின்னுதிரி. (௨௨௬௩)

லாகநவக்ரகங்களவ்வவர்கடங்களெதாஸ்
தானங்கடன்னில்வந்துசார்ந்திடவும் வானுறுமி. (௨௨௬௪)

யன்னுளிராத்திரியேயார்த்தசப்தமேகமதின்
முன்னுமாவர்த்தமுகில்கிளம்பி மின்னலூடன். (௨௨௬௫)

விற்போட்டிரைந்திருட்டிமேவுமழைக்காலூன்றிப்
பொற்போனன்மாரிபொழிந்தனவே யற்பகலா. (௨௨௬௬)

யெட்டுநாளாகயிடைவிடாதெங்குமழை
சட்டமுடனெய்திடவித்தாரணியோர் பட்டடங்கா. (௨௨௬௭)

வானந்தவாரியினிலாழ்ந்திமனப்பூர்த்தியுறத்
தானந்தவமிரண்டுந்தானெய்த மீனுந்து. (௨௨௬௮)

வேகவதியேமுதலாய்வெள்ளங்கரைபுரண்டு
மாகனநீர்வாவியெங்குமல்கினவே சேகரமாய்த். (௨௨௬௯)

தேண்டுபசுக்கூட்டமுடன்செம்மறிகளுங்கொடுகி
யாண்டதெய்வசன்னதம்போலாடிநிற்க மூண்டவெயில். (௨௨௭௦)

கிட்டப்பொருதகிளரெருமைக்கூட்டமட்டுஞ்
சட்டைபண்ணுமற்களைத்துத்தாவிநிற்க முட்டநின்ற. (௨௨௭௧)

கோட்டைச்சுவர்களெல்லாங்கோடையிடிபோன்முழங்கி
நீட்டிநிமிர்ந்துநிலம்படிப்பச் சூட்டாலே. (௨௨௭௨)

சராசரங்களெல்லாஞ் செழித்தல்.

தீய்ந்துகருகிச்செறிந்ததருககளெல்லாம்
நேர்ந்துதழைத்தோங்கிநிழல்கொடுக்கச் சோர்ந்துமிக்க. (௨௨௭௩)

கண்ணிலுங்காணுமற்கரிந்தபுல்லும்பூடுகளுந்
தண்ணிலைகளோடுதலைநீட்ட துண்மையொடு. (௨௨௭௪)

தூங்கலாயன்றிடைந்ததும்பிக்குழாங்கள்மத
மோங்கியிறுமாந்தங்குரத்துநிற்கத் தேங்குதுகள். (௨௨௭௫)

மண்பறியத்தாளெறிந்தமாக்குலங்கண்மீறியெழு
விண்பரியைப்பார்த்துமிகநகைக்கப் பண்புறுநல். (உஉஎசு)

லானிரைகள்கன்றுகளீன்றுதரமுற்றேகாம
தேனுவெனப்பால்சொரிந்துத்தக்கமுற மாநிலத்தி. (உஉஎஎ)

லெய்தியசராசரங்களெல்லாஞ்செழித்துயிர்க
ளுய்தலைப்பெற்றுனந்தமோங்கினவே செய்களில்வந். (உஉஎஅ)

தேருழவரோசைகளுமேய்வித்துனர்களிப்பும்
நாரியர்நென்னாற்றுங்கிமொலியும் பார்முழுது. (உஉஎகூ)

நன்னீர்மையந்தணர்கணான்மறையினோசைகளு
முந்நீர்த்தொனிபோன்முழங்கினவே பன்மலரிற். (உஉஅ0)

பீறிவருதேனொழுக்கும்பேரினியமுக்கனியின்
சாறுமோராறுய்த்தலைப்பெய்தி மீறிவயல். (உஉஅக)

விந்தையுடன்பாய்தலினுல்விஞ்சுசெழுஞ்சாலிவளர்ந்
துந்திவெளிவான்முகட்டையொட்டியதே முந்திவினை. (உஉஅஉ)

செந்நெலரிந்துசுமைசேர்த்துக்களங்கொடுபோய்ப்
பொன்னசலமானபலபோர்வைத்துப் பின்னை. (உஉஅங)

வலியகடிபூட்டிவழுதகற்றிப்பாடிப்
பொலிபொலியெனமேதிப்புகழ்ந்து கலியகற்றும். (உஉஅச)

புண்ணியனும்பூதலத்தைப்போஷிக்கும்நெல்லையாப்ப
வண்ணலைக்கண்டானந்தமாகினேனும் விண்ணிவர்ந்து. (உஉஅரு)

கானுந்தலைமேற்கணபதியைத்தாங்கியருள்
பூணுமலைபோற்பொலிந்தபூசகனைப் பேணிச். (உஉஅகூ)

சுகந்தழைக்கவந்தருளுந்தூய்மணியைக்கையான்
முகந்துகண்ணிலொற்றிமுத்தாரிட்டுச் செகம்புரக்கு. (உஉஅஎ)

மன்னர்க்குச்சேர்கடமைவாரந்தனைச்செலுத்திப்
பின்னர்குடிவாரப்பெருக்கமதைக் கொன்மருவு. (உஉஅஅ)

மைப்பகடுபூட்டியுயர்வையங்கண்மீதேற்றிச்
செப்பரியநன்மனையிற்சேர்த்தினே மெய்ப்புகழ்சேர். (உஉஅகூ)

செல்வம்பெற்று வாழ்தல்.

தென்புலத்தார்தெய்வம்விருந்தொக்கறனென்றாங்
கைம்புலத்தாறோம்பறலையென்று முன்புலமை. (உஉகூ0)

வள்ளுவனூரன்றுரைத்தவாக்கியத்தையுள்ளிருத்தித்
தெள்ளிமையாய்மிக்கசிரத்தையுட னெள்ளியதூன். (உஉகூக)

மாமறையோர்போஜனங்கண்மாகேசுரபூஜை
க்ஷேமமுடனுடோறுஞ்செய்வித்து நேமமுடன். (உஉகூஉ)

சூழ்ந்தவிருந்தோடருந்திச்சொற்கலைநூலாய்ந்துநலம்
வாய்ந்தசெல்வந்துய்த்தினிதாய்வாழ்கின்றோம் வேந்தன்வடி. ()

வேலுடையான்முத்துவிஜயரெகுநாதனெனு
மால்துரைச்சிங்கேந்திரவரனருளாற் சூல்முதிர்ந்து (உஉகூச)

திங்கடொறுமங்கலச்சிறந்துபொழிந்திடவு
மங்கலகுபேரரெனவர்த்தித்துப் பொங்கமுடன். (உஉகூரு)

றக்கவதிகாரந்தனைச்சார்ந்தநல்லடிமை
மக்கள்சுற்றம்பொன்மணிநெல்வாகனங்கள் மெய்க்குமிந்த.(உஉகூசு)

வைசுவர்யமெட்டுமடங்காவுவைகைதர
வையகத்திற்பெற்றினிதாய்வாழ்கின்றோம் செய்யமலர்ச். (உஉகூஎ)

செந்திருவேயெங்களுடைசெய்திமுற்றுமாதியோ
டந்தமாயுன்பாலறிவித்தேன் சந்ததமும். (உஉகூஅ)

நெல்லுக்கிறைத்தநீரவாய்க்கால்வழியோடிப்
புல்லுக்குமாங்கேபுசிதல்போற் றொல்லுலக. (உஉகூகூ)

வாழி.

மெங்குஞ்செழிப்புற்றிசையும்புவியரசர்
செங்கோல்தழைத்துச்செயமோங்கித் தங்கிமலர்ச். (உரூ00)

செங்கமலைவாழ்கச்செகமீதறம்பெருகி
மங்களமென்மேலு மிகவாழி. (உரூ0ச)

திருமுகவிலாசம்

முற்றிற்று.